# 3

# கள்ளப் போதகர்கள்

## (2:1-22)

*அப்போஸ்தலர்களின் வாசகர்களை கலக்கமடையச் செய்து கொண்டிருந்த கள்ளப் போதகர்களுக்கு அதிகாரம் 1ல் பேதுருவின் உபதேசங்கள் எழுதப்பட்டிருக்குமேயானால், அது மிக நுட்பமானது. அநேகமாக அவர் சபைகளை எதிர்த்து முரண்பாடான உபதேசங்களை மனதில் கொண்டு தனது வார்த்தைகளை தெரிவுசெய்து எழுதியிருக்க வேண்டும், ஆகிலும் அவர் தனது உபதேசத்தை அப்போஸ்தலரை எதிர் பேசினவர்களோடு தொடர்புபடுத்தி பார்க்கும்படி விட்டு விட்டார். இந்த இடத்தில் அவர் தனது தந்திரத்தை விட்டு விட்டார். அங்கே கள்ளப் போதகர்கள் சபையில் இருந்து கொண்டே கிறிஸ்தவ உபதேசத்தை அதன் மையப் பகுதியையே மிரட்டல் விடுவரோயிருந்தனர். அந்தப் போதகர்களைக் குறித்த விளக்கங்கள் யூதாவில் சொல்லப்பட்டதற்கு ஒப்பானவை. அவைகள் வசனப்பகுதியில் காணுகிறபடி அதன் மொழிநடையில் ஒத்திருப்பதை நாம் கவனிக்கக் கூடும்.*

## *கள்ளப் போதகர்களைக் குறித்த எச்சரிக்கை (2:1-3)*

***[1]கள்ளத் தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள்,
அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதர்கள் இருப்பார்கள், அவர்கள்
கேட்டுக் கேதுவான வேதப்புரட்டுக்களைத் தந்திரமாய் நுழையப் பண்ணி,
தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத்
தீவிரமான அழிவை வருவித்துக் கொள்ளுவார்கள். [2]அவர்களுடைய
கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள் நிமித்தம்
சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும். [3]பொருளாசையுடையவர்களாய்,
தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு
ஆதாயமாக வசப்படுத்திக் கொள்ளுவார்கள்; பூர்வகால முதல் அவர்களுக்கு
விதிக்கப்பட்ட ஆக்கினை அயர்ந்திராது, அவர்களுடைய அழிவு உறங்காது.***

*__வசனம் 1.__ 1வது அதிகாரத்தின் முடிவு வசனத்துக்கும் 2வது அதிகாரத்தின் துவக்க வசனத்துக்கும் அப்படியொன்றும் கூர்மையான இடைவெளிஇல்லை. தேவன் இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் தீர்க்கதரிசிகளை அனுப்பினார். "பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு" (1:21), அவர்கள் தேவனுடைய செய்தியை பேசவும் எழுதவும் செய்தார்கள், ஆகிலும் இஸ்ரவேலர்கள் தங்களுக்குள்ளிருந்த சில மனுஷர்கள் தேவனிடத்திலிருந்து தங்களுக்கு செய்தி கிடைத்திருப்பதாக சொல்லி தங்களுக்கே சேவை செய்து கொண்டனர். அதே வேளையில் தேவனுடைய தீர்க்கதரிசிகள் அவருடைய வார்த்தையை அறிவித்துக் கொண்டிருந்தார்கள். __கள்ளத் தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே__*

**இருந்தார்கள்** என்று பேதுரு குறிப்பிட்டார். குறிப்பாக எரேமியாவும் எசேக்கியேலும் "கள்ளத் தீர்க்கதரிசிகளோடு" போராடிக் கொண்டிருந்தார்கள். எரேமியாவும் எச்சரிக்கையாக, "உங்களுக்குத் தீர்க்க தரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேளாதிருங்கள். அவர்கள் உங்களை வீண்பெருமை கொள்ளும்படி செய்கிறார்கள், கர்த்தருடைய வாக்கைஅல்ல; தாங்கள் யூகித்த தரிசனத்தையே சொல்லுகிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமியா 23:16) என்றார்.

"கள்ளத்தீர்க்கதரிசிகளும் இஸ்ரவேல் ஜனங்களுக்குள்ளே" இருந்தபடியால், பேதுருவின் முதல் வாசகர்களுக்குள்ளேயும் **கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்** என்பது ஆச்சரியமாக இருக்கக் கூடாது. கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் கள்ளப் போதகர்களுக்கும் உள்ள வித்தியாசம் தெளிவாகத் தெரியவில்லை. ஒருவேளை அப்போஸ்தலன் எதிராக போதிப்பவர்களை "தீர்க்கதரிசிகள்" என்று குறிப்பிட்டு அவர்களுக்கு மேன்மையான வார்த்தையைக் கொடுக்க விரும்பாமலிருக்கலாம், "கள்ள" என்ற வார்த்தைக்கு அடுத்து குறிப்பிடப்பட்டாலும் அந்த வார்த்தையை அவர் பயன்படுத்த விரும்பவில்லை. இந்த இடத்தில் நாம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிய இரண்டு முக்கியமான காரியங்கள் உண்டு. முதலாவதாக, பெரும்பாலான கடினமிக்க போராட்டத்தை சபை சந்திப்பதெல்லாம் உள்ளுக்குள்ளாக இருந்தே வருகிறது. பவுலின் நிருபங்கள் அதே போல சுவிசேஷத்தைக் குறித்து கொஞ்சக் காரியங்களை மட்டுமே கொண்டுள்ளன, கூடிவரும்போது அந்தக் கூட்டத்தில் நடப்பவைகளும், அல்லது தருமக்காரியங்களில் ஒத்துழைப்புக் கொடுப்பதும், ஆகிய இந்த அனைத்துக் காரியங்களையும் கொண்டுள்ளது. மாறாக, அவருடைய நிருபங்கள் இரண்டு விஷயங்கள் மீது கவனம் செலுத்துகின்றன: கிறிஸ்தவ விசுவாசத்தின் மாபெரும் விசுவாசக் கோட்பாடுகளும் அந்தப் போதனைகளுக்கு எதிராக அவருடைய எதிர்ப்பாளர்களின் சவால்களும். முடிவில்லாத போராட்டத்தை அந்த கிறிஸ்தவ உபதேச மற்றும் ஆசரிப்புகளைக் காத்துக் கொள்ள சபை போராடிக் கொண்டுள்ளது. கிறிஸ்தவர்கள் தங்கள் கைகளைப் பிசைந்து கொண்டு "கள்ளப் போதகர்களினிமித்தம்" புலம்பி தீர்ப்பதாலே கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக் கொண்டுள்ள கெட்ட நடக்கைகளை கொண்டிருப்பவர்களைக் குறித்தோ அது எந்த வித நற்காரியங்களையும் நடப்பிப்பதில்லை. ஆங்கில பழமொழி சொல்லுகிறது போல, "விசுவாசிகள் தங்கள்" "கால் உறைகளை இழுத்து விட்டுக் கொண்டு" தொடர்ந்து போதிக்கவும் சத்தியத்தைப் பிரசங்கிக்கவும் வேண்டியதுதான்.

இரண்டாவதாக, கிறிஸ்தவர்களின் உயர்ந்த நற்குணங்கள் சந்தர்ப்பவாதிகளால் அவர்களுக்கே ஊறு விளைவிக்கக் கூடியவைகளாயிருக்கின்றன. கர்த்தர் தம்மைப் பின்பற்றுவோர் நல்ல ஜனங்களாயிருக்கும் படியாகவும், மற்றவர்களைக் குறித்து நல்லதையே நினைக்கும்படியாகவும், தங்களைத் தாங்களே பரிசோதித்துக் கொள்ளும்படியாகவும், அந்நியர்களையும் சிநேகிதர்களையும் ஒரே மாதிரியான கனிவுடன் நடத்தும்படியாகவும் மரியாதை செலுத்தும்படியாகவும் போதித்தார். சபையின் ஆதி காலம் தொட்டே, கிறிஸ்தவர்களின் நம்பிக்கையையும் உதாரகுணத்தையும் விழுங்கிக் கொண்டிருந்த துரோகிகள்

இருந்தனர்.[1] பணம் மட்டுமே உட்படுத்தப்படும்போது, சீஷர்கள் ஒருவேளை தயாள குணத்தில் தவறு செய்திருக்கக் கூடும், அவர்கள் சந்தர்ப்ப வாதிகளோ என சந்தேகப்படும் நேரங்களில் கூட அப்படி நடந்திருக்கலாம்.[2] எப்படியிருப்பினும் சபையின் நல்ல அபிப்பிராயத்தை ஜனங்கள் வேறு வழிகளிலும் கூட பயன்படுத்தியிருக்கலாம். சீஷர்கள் ஒருவேளை சுய அதிகாரத்தைத் தேடுவோராலும் அல்லது சுய தத்துவங்களால் திருமறைப் போதனைகளை மறுதலிக்கிறவர்களாலும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கலாம். தம்முடைய மக்கள் தங்களுடைய அன்பினாலே ஒருவரையொருவர் நேசிப்பதன் மூலம் ஆச்சரியப்படத்தக்க வகையில் குறிப்பிடத்தக்கவர்களாயிருப்பார்கள் என்று இயேசு சொன்னார் (யோவான் 13:35). விசுவாசிகள் அப்படிப்பட்ட வழிநடத்துதலை கனம்பண்ண விரும்புகிறார்கள். இந்தக் காரணத்தினால், கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பதாகச் சொல்லிக் கொண்டே கர்த்தரை மறுதலிக்கிறவர்களுக்கு முன்பாக உறுதியாகத் தரித்திருப்பது அவர்களுக்கு கடினமானது.

“கள்ளப் போதகர்கள்” ஏன் 2 பேதுருவில் மிரட்டுகிறார்கள் என்றும், பேதுரு ஏன் உணர்ச்சி வேகத்தில் அவர்களை எதிர் பேசுகிறார் என்றும், நாம் அறிந்து கொள்ள விரும்புகிறோம். ஆனால் அவர்கள் போதித்தவைகளைக் குறித்து அப்போஸ்தலன் மிகச் சிறிய அளவிலேயே சொல்லியிருக்கிறார். அவர் குறிப்பிட்டதெல்லாம் அவர்கள் வஞ்சகமான தந்திரங்களைப் பயன்படுத்தி, கேட்டுக்கேதுவான வேதப் புரட்டுக்களைப் போதித்தனர் என்பதே. மதங்களுக்கு விரோதமான (மார்க்க விரோத) ஒரு வேதப்புரட்டு என்பது கிறிஸ்தவ விசுவாசத்தை கனவீனப்படுத்துகிற பிரிவினைவாத கள்ள உபதேசமாகும். ஒரு வகையில், “கேட்டுக்கேதுவான மார்க்க விரோதப் போதனைகள்,” அளவுக்கதிகமாகவே அவர்களிடத்திலிருந்தது. மார்க்க விரோத போதனைகள் அதன் இயல்பிலேயே அழிவுள்ளது. அது சபைக்கும், கிறிஸ்துவின் செய்தியைக் கொண்டு சபை அடைய விரும்பும் உலகத்துக்கும் கேடுண்டாக்கத் தக்கது.

“கள்ளப்போதகர்களின்” கேட்டுக்கேதுவான உபதேசங்கள் அதாவது பேதுருவால் எதிர் கொள்ளப்பட்ட அவைகள் மிகவும் வேதனையானவை. அவர்கள் **தங்களை கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலிக்கிற அளவுக்கு** போயிருந்தார்கள். என்ன அர்த்தத்தில் அவர்கள் அவரை மறுதலித்தனர்? முந்தைய அதிகாரத்தில் மறுரூபமலையில் நடந்த நிகழ்ச்சிகளை அப்போஸ்தலனுக்கு உறுதிபடுத்தி தேவனிடத்திலிருந்து உண்டான சத்தத்தை அதன் உச்சக்கட்ட ரீதியில் விவரித்து. “இவர் என்னுடைய நேசகுமாரன்,” என்று சொன்னதாக விவரிக்கிறார். இயேசுவின் குமார ஸ்தானமும், இப்படியாக அவர் தெய்வீகம் நிறைந்தவர் எனும் போதனையே, அவர்களின் பிரச்சனை. பேதுருவைப் பொறுத்தமட்டில், கிறிஸ்துவின் தெய்வீகம் என்பது எந்த வித குற்றச் சாட்டுக்கும் அப்பாற்பட்டது. எனவே “கள்ளப்போதகர்கள்” கர்த்தரின் தெய்வீகத்தின் முழு உண்மையை மறுதலித்தனர், அல்லது முழு மனுஷீகத்தையும் கூட மறுதலித்தனர்; இதற்கப்பால் மிகச் சிறிய அளவிலேயே நாம் சொல்லக் கூடும்.

நமது அறிந்துகொள்ளும் ஆவல் தூண்டப்பட்டுள்ளது. “கள்ளப்

போதகர்கள்" இயேசுவின் தெய்வீகத்தை மறுதலித்திருப்பார்களானால், அவர்கள் அவரை யார் அல்லது என்னவென்று விசுவாசித்தார்கள்? ஒரு ஞானமிகு போதகராகவா? ஒரு தேவதூதன் தெய்வீகக் குணம் பொருந்தியவனாக, ஆகிலும் எல்லாவற்றிலுமல்ல என்ற ரீதியிலா? பேதுரு குறிப்பிடவில்லை. அப்போஸ்தலனுக்கு கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுப்பது என்பது அவர் "தங்களை கிரயத்துக்குக் கொண்டவர்" என்பதையே மறுதலிப்பதாகும். ஆர்வமிக்க காரியம் என்னவெனில், இயேசுவின் மரணத்தைக் குறித்து 2 பேதுருவில் பேசுகிற ஒரே இடம் இதுதான், அதுவும் மறைமுகமாகவே பேசப்படுகிறது. இருந்தும், கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கும் வல்லமையைக் குறித்து பேதுரு பேசியதுவே பிரச்சனைக்குரியதாயிருந்தது, கர்த்தர் அவர்களை கிரயத்துக்குக் கொண்டதாகச் சொன்னார். அவர் தமது இரத்தத்தினால் அவர்களைக் கிரயத்துக்கு கொண்டார். இங்கே பயன்படுத்தப்படும் மீட்பு அல்லது வாங்குதல் என்பது (agorazō) என்று அதே வினைச்சொல்லில் 1 கொரிந்தியர் 6:20, மற்றும் 7:23ல் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிகழ்வுகளிலே, கிரயத்துக்கு வாங்குவது விசேஷமாக இயேசு சிலுவையில் சிந்தின இரத்தம் என்பதுடன் தொடர்புபடுத்தி பேசுகிறது. 2 பேதுருவில் இயேசுவின் மரணத்திலிருந்து உயிர்த்தெழுவது குறித்துப் பேசப்படுவதில்லை, ஆனால் உயிர்த்தெழுந்த கர்த்தரே ஆளுகிறார் என்று காட்டுகிறது. அநேகமாக, "கள்ளப் போதகர்கள்" தேவனுடைய வலது பாரிசத்தில் இருந்து கொண்டு இயேசு ஆளுகை செய்து கொண்டிருந்ததை மறுதலித்தார்கள் போலும்.

கிரயத்துக்குக் கொள்ளுதலும் மீட்குதலும் தொடர்புடைய வார்த்தைகள்தான். அது தேவனுடைய நேச குமாரனாகிய இயேசு ஜனங்களை பாவங்களிலிருந்து மீட்கக் கூடியவராக இருந்தார். "கள்ளப் போதகர்கள்" கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுதலித்த போது, அவர்களை கிரயத்துக் கொள்ளுகிற அவருடைய வல்லமையை மறுதலித்தார்கள். அவர்கள் கிறிஸ்தவ உபதேசத்தின் இருதயப்பகுதியிலிருக்கும் அறிக்கையை மறுதலிப்பதால், "கள்ளப் போதகர்கள்" **தங்களுக்குத் "தீவிரமான அழிவை" வருவித்துக் கொண்டிருந்தார்கள்.** பேதுரு ஏற்கனவே அவர்களுடைய போதகத்தை "கேட்டுக் கேதுவானவை" என்று சொன்னார்.[3] அப்படிப்பட்ட போதனைகள் மற்றவர்களையும் அவர்களினிமித்தம் பரிந்து பேசுபவர்களையும் அழித்துப் போடுகிறதாயிருக்கிறது. பேதுருவின் வாசகர்கள் "கள்ளப் போதகர்களைப்" பின்பற்றுவார்களானால், அதே "தீவிரமான அழிவைத்" தங்களுக்கு வருவித்துக் கொள்வார்கள் என்பதே குறிப்பாக இருக்கிறது.

**வசனம் 2.** "கள்ளப் போதர்களின்" உபதேசத்துக்கு சிறிய கவனம் மட்டுமே செலுத்தப்பட்ட போதிலும், அவர்களின் நடக்கைகள் குறித்து ஒரு பொதுவான விளக்கம் மட்டுமே பேதுருவின் நிருபத்தில் காட்டப்படுகிறது. ஜனங்கள் பெரும்பாலும் தாங்கள் கேள்விப்படுகிற சத்தியத்தை பேசுகிற (போதிக்கிற) நபரின் நடக்கையைக் கொண்டே கவனிக்கிறார்கள் அல்லது மதிப்பிடுகிறார்கள் என்பதை பேதுரு அப்போஸ்தலன் புரிந்து கொண்டிருந்தார். இதே காரணத்திற்காக அவர் தனது சுய ஆதாரச் சான்றை பலமாக முந்திய அதிகாரத்தில் நிரூபித்தார், அவரை எதிர்பேசினவர்களின் வேதப் புரட்டுகளுடனான உபதேசங்களை எதிர்த்தார். அவர்கள் கெட்ட

நடக்கைகளையுடையவர்களாய் இருந்தது மாத்திரமல்ல, ஆனால் 2:19ன்படி அவர்கள் சில உபதேசக் கோட்பாடுகளிலோ அல்லது எழுத்து வடிவ உபதேசங்களிலோ **மாம்ச இச்சைகளை** நிறைவேற்றிக் கொள்வதை நியாயப்படுத்தவும் செய்கிறார்கள். இச்சையடக்கத்தை கைக் கொள்வதை விட இச்சையில் மூழ்கிப்போவது எளிது. அவர்களுடைய கெட்ட நடக்கைகளை ஏன் **அநேகர் பின்பற்றுவார்கள்** என்பதை விளங்கிக் கொள்வது கடினமானதல்ல.

சபையில் கெட்ட நடக்கைகளை சகித்துக் கொண்டிருக்கும்போது, விசேஷமாக தங்களை போதகர்கள் என்று சொல்லிக் கொள்வோர்களால் அது நடப்பிக்கப்படுகையில், அதின் பாதிப்பு அந்தப் போதகர்களோடும் மட்டும் நின்று விடுவதில்லை. சரீரம் முழுவதும் பாடுபடும். கர்த்தர்தாமே பாடுபடுகிறார். ஏனெனில் சத்தியமார்க்கம் அவர்களாலே தூஷிக்கப்படுகிறது. போதனைகளையும் கிறிஸ்தவர்கள் தங்கள் ஜீவியத்தின் வழியாக பின்பற்றி கைக் கொண்டிருந்த உபதேசக் கொள்கைகளையும் "சத்திய மார்க்கம்" என்று குறிப்பிட பேதுரு தயக்கம் காட்டவில்லை. ஏற்கனவே அவருடைய வாசகர்கள் "சத்தியமார்க்கத்தில் உறுதிப்பட்டிருந்ததாக" அவர் குறிப்பிட்டிருந்தார் (1:12). பேதுரு, "சத்தியத்தில்" என்று மட்டும் குறிப்பிடாமல், "சத்திய மார்க்கத்தில்" என்று குறிப்பிட்டதற்கு ஏதாவது காரணம் இருந்திருக்கக் கூடுமா, அல்லது எழுதுகிறநடை அப்படியா? அநேகமாக பின்னதாகச் சொன்னது சரியாக இருக்கக் கூடும். இருந்தாலும், "மார்க்கம்" என்பது சத்தியத்திற்குட்பட்டதாக சுருக்கிச் சொல்லுவதல்ல. அது ஒரு உறுதிப்படுத்துவதற்கான அமைப்பு, அது உபதேசங்களுக்கு மேலானது; அது பயணிக்கப்படவேண்டிய ஒரு பாதை. கிறிஸ்துவை அறிக்கையிட வேண்டுமானால். "தேவனுடைய மார்க்கத்தில்" இருக்க வேண்டும் (நடபடிகள் 18:26), "சமாதானத்தின் மார்க்கத்தில்" இருக்க வேண்டும் (ரோமர் 3:17; NIV) "புதிதும் ஜீவனுமான மார்க்கத்தில்" இருக்க வேண்டும் (எபிரெயர் 10:20), மற்றும் "நீதியின் மார்க்கத்தில்" இருக்க வேண்டும் (2 பேதுரு 2:21).

விசுவாசிகளின் போதனைகளும் கைக்கொள்பவைகளும் அவர்களை ஒரு ஜனக்கூட்டமாக கட்டுகிறது, கிறிஸ்துவுக்குள் இருப்பது என்பது அவருடைய சரீரத்திற்குள் இருப்பது அவசியம். சரீரத்தின் எந்த அவயவமும் பாடுபட்டாலும், சகல அவயவங்களும் பாடுபடும் சபை தூஷிக்கப்படும், ஒரு காலக் கட்டத்தில் கர்த்தரும் கூட தூஷிக்கப்படுவார், அவருடைய நாமத்தைத் தரித்துக் கொண்டவர்கள் சிற்றின்ப சந்தோஷங்களால் ஈர்க்கப்படும்போது, அவை மற்றவர்களையும் அழித்து தாழ்ச்சியடையச் செய்யும்.

அஞ்ஞான உலகத்து மக்கள் கத்தருடைய சரீரத்தை தவறாக தூஷிப்பது எதிர்பார்க்கவே முடியாத ஒன்றாக இருந்தது. உலகம் அவர்களுடைய நடத்தையினிமித்தம் ஒருவருக்கொருவர் சகித்துக் கொள்ளும்போது கிறிஸ்தர்கள் தூஷிக்கப்படுகிறார்கள் என்பது ஆச்சரியமளிக்கிறது, கிறிஸ்தவர்களல்லாதவர்கள் கூட கிறிஸ்தவர்கள் பரிசுத்தமாக வாழ்பவர்கள் என்ற நிலையை மனதில் கொண்டுள்ளனர். அவிசுவாசமுள்ள ஜனத்தாராகிய அவர்கள் கள்ள உபதேசத்தை போதிக்கிறவர்களைக் குறித்து கொண்டுள்ள கருத்து எனும் "பிரஷ்" கொண்டு முழு சபையையும் வண்ணம் தீட்டி விடுவார்கள், என்பது குறித்து கிறிஸ்தவர்கள் விழிப்புள்ளவர்களாயிருக்க வேண்டும்.

அவபக்தியுள்ளவர்கள் தொடர்ந்து சபையிலிருக்கிற மிகப் பெலவீனமான அங்கத்தினர்களை வைத்து நியாயந்தீர்ப்பவர்களாயிருப்பார்கள்.

கிறிஸ்தவ உபதேசத்துடன் தவறோடு ஒத்துப் போனவர்களின் நடத்தைகளையும் சென்ற பாதைகளையும் பார்த்து அப்போஸ்தலரின் உணர்ச்சிகரமான தாக்குதல் வாசகர்களுக்கு இந்த நிருபத்தின் இரண்டாம் அதிகாரம் மனச் சோர்வை ஏற்படுத்துகிறதாக இருக்கும். இரண்டாம் அதிகாரம் வாசிப்பதில் சற்று அலைகழிக்கக் கூடியதும் மனச் சோர்வுடையதுமாக்கும். எப்படியிருப்பினும், அப்போஸ்தலரின் புத்திமதிகள்தான் புதிய ஏற்பாட்டில் மிக அதிகமாய் கைக் கொள்ளப்பட வேண்டியவைகளாகக் காணுகிறது என்பதை நாம் கவனிக்கத் தவறிவிடக் கூடாது. பேதுரு தெளிவாக்கினதெல்லாம் கள்ளப் போதகர்களை சகித்துக் கொண்டிருந்தலாகாது என்பதுதான். அவர்கள் சபையை தங்கள் வசப்படுத்தக் கூடியவர்களாகவோ, அதன் ஜீவிய மார்க்கத்தை மட்டப்படுத்துகிறவர்களாகவோ, அதன் சட்டதிட்டங்களை மட்டுப்படுத்தவோ, இருக்கிறவர்களாக அனுமதிக்கக் கூடாது. கிறிஸ்துவின் நாமத்தினால் கிறிஸ்தவ உபதேசத்தை தவறோடு ஒத்துப்போகக் செய்கிறவர்கள் இருக்கும் வரை, கிறிஸ்தவ ஜனங்களை சுய நலத்திற்கென பயன்படுத்திக் கொள்ளும் வரை, 2 பேதுருவின் வழிகாட்டல் சபைக்கு அவசியமானது, நிருபத்தில் எழுதப்பட்டுள்ள பிரச்சனைகளெல்லாம் பொருத்தமற்றவைகளல்ல; அவைகள் ஒழிந்துபோகவில்லை.

**வசனம் 3.** “சிற்றின்ப” சந்தோஷத்திற்காகத் தங்களை ஒப்புக் கொடுத்தவர்கள் கூடுதலாக சபைகளை தொந்தரவு பண்ணி **பொருளாசையால்** நிறைந்திருந்தனர். அவர்கள் தங்கள் தந்திரத்தாலும் வஞ்சகங்களினாலும் தங்களுடைய காரியத்தை சாதித்துக் கொள்ளலாம் என்பதற்கு மேலாக எதையும் பயன்படுத்தவில்லை. **கள்ள வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக் கொள்வார்கள்** என்று பேதுரு எச்சரித்தார். கள்ளப் போதகர்களைக் குறித்து பேதுரு ஏற்கனவே மூன்று காரியங்களைச் சொல்லியிருந்தார்: (1) அவர்கள் கர்த்தரை மறுதலித்தார்கள் (2) அவர்கள் கெட்ட நடக்கைகளையுடையவர்களாயிருந்தனர். (3) பொருளாசையால் நிறைந்திருந்தனர். தந்திர நோக்கம் கொண்டவர்கள் மனிதத் தேவைகளினால் தங்கள் இலாபத்திற்காக சூறையாடினார்கள். ஆதாய வசப்படுத்திக் கொள்ளுதல் எங்கும் நடப்பதுதான். சிலர் சரீர ஆரோக்கியத்தைக் குறித்த ஆசை காட்டி தங்களை மருத்துவர்களைப்போல நடித்துக் கொண்டு அல்லது சில அற்புத மருந்துகளைக் கொண்டிருப்பதாக காட்டி ஆதாயம் தேடுவர். பொருளாசையால் மனம் நிரப்பப்பட்டவர்கள் பக்தியை ஒரு அடிப்படையாகக் கொண்டு முறையற்ற வழியில் தங்களுக்கு ஆதாயத்தைத் தேடிக் கொள்வார்கள் என்பது குறித்து விசுவாசிகள் ஆச்சரியப்படக்கூடாது. அவர்கள் கெட்ட நடக்கைகளினின்று விடுபடும் ஒரு வாக்குறுதி கொண்ட வார்த்தையைப் பேசி உணர்ச்சி வசப்பட்ட நிலையில், கள்ளப் போதகர்கள் ஒரு ஆயத்தக் கூட்டமக்களைப் பெற்று விடுவார்கள்.

பேதுரு ஏற்கனவே குறிப்பிடுகையில் கள்ளப்போதகர்கள் தங்களுக்குத் “தீவிரமான அழிவை வருவித்துக் கொள்வார்கள்” என்று சொல்லியிருந்தார். மேலும் வலியுறுத்தலோடு சேர்த்து அவர், “பூர்வகாலம் முதல் அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஆக்கினை அயர்ந்திராது, அவர்களுடைய அழிவு உறங்காது”

என்றார். அப்போஸ்தலன் அவர்களுக்கு மனிதத் தனிப் பண்பு முறையில் "நியாயத்தீர்ப்பையும்" "அழிவையும்" முன் வைக்கிறார். கிரேக்கர்கள் மனித தனிப்பண்பை விக்கிரக வணக்கத்துக்கு ஒப்பிட்டார்கள். *Erōs* எனும் வார்த்தை சரீர (காம) காதலை வெறித்தனமான வேட்கையை காட்டுவதுமட்டுமல்ல, அது ஈரோஸ் எனும் ஒரு களியாட்டு மிகுந்த ஒரு இளம் கடவுளின் பெயராகவுமிருந்தது, அவன் Aphrodite ன் மகன், அவன் மற்றவர்களுக்குள் தீப்பொறியென தனது காதலை வெளிப்படுத்துவான் என கருதப்பட்டது. அதேபோல, சுகமளிக்கும் கடவுளாகக் கருதப்பட்ட Asclepius சில வேளைகளில் சுகமளிப்பவள் என்று ஒரு தேவதையின் பெயராக *(Hugieia)* சொல்லப்பட்டது.

பேதுருவைப் பொறுத்தமட்டில் தனி மனிதப் பண்பு என்பது ஒரு உருவக மொழியாக ஒரு நாடக மேடை வசனமாக, வாக்கியங்கள் பேசப்பட்டன. அது கடந்த காலத்தில் தேவனுடைய சித்தமாயிருந்தது (*ekpalai),* மரணம், இறுதி தீர்ப்பு போன்ற எல்லாவற்றிற்கும் முடிவான காலத்தில், கள்ளப்போதகர்கள் போன்ற மனுஷர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்து போவார்கள், பேதுரு தனது வாசகர்களுக்கு உறுதியாக, "கள்ளப் போதகர்களின் விதியைக் குறித்து எந்த தவறும் செய்திட வேண்டாம்," என்று சொன்னார். தேவனுடைய நோக்கங்களெல்லாம் நடைமுறையில் வந்து கொண்டிருந்தது. அவர் உலகில் செயலாற்றுகிறார், நியாயத்தீர்ப்பு என்பது "ஒன்றுஞ்செய்யாமலிருப்பதோ" அல்லது "உறங்கிக்கொண்டோ" அல்ல. பின்வரும் வசனங்களில், பேதுரு தேவனுடைய நியாயத்தீர்ப்பு உண்மையில் நிறைவேற்றப்பட்டதற்கான நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகிறார். 3:9ல், போல பேதுரு தேவனுடைய பொறுமையைத் தவறாகப் புரிந்து கொண்டு அலட்சியமாகவும் உதவியற்ற நிலையிலும் இருக்கும் நிலையில் கடந்த காலத்தில் தேவன் உலகின் மேல் கொண்டு வந்த நியாயத்தீர்ப்பை ஆராய்ந்து பார்க்கும்படி குறிப்பிட்டார்.

## தேவனுடைய நியாயத்தீர்ப்பின் நிச்சயம் (2:4-10)

**[4]பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து; [5]பூர்வ உலகத்தையும் தப்ப விடாமல், நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப் பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி; [6]சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப் போட்டு, ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளைத் திருஷ்டாந்தமாக வைத்து; [7]அக்கிரமக்காரருக்குள் வாசமாயிருக்கையில் அவர்களுடைய காம விகார நடக்கையால் வருத்தப்பட்டு; [8]நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக் கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன் இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க; [9]கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார். [10]விசேஷமாக அசுத்த**

***இச்சையோடே மாம்சத்துக் கேற்றபடி நடந்து, கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணுகிறவர்களை அப்படிச் செய்வார். இவர்கள் துணிகரக்காரர், அகங்காரிகள், மகத்துவங்களைத் தூஷிக்க அஞ்சாதவர்கள்.***

*இந்த நெடிய கிரேக்க வாக்கியம் ஒரு சரியான முடிவுக்கு ஒரு போதும் வருவதில்லை. அது 10 வது வசனத்தில் முடிவுறுகிறது, இதிலே மேற்கொண்டு கள்ளப் போதகர்களைப் பற்றி மேலும் விளக்கமளிக்க ஏதுவாக தனது கவனத்தை பேதுரு திருப்புகிறார். தொடர் நிலைப்பாடு கொண்ட தண்டனைகளுடன், அப்போஸ்தலன் வாதிட்டு கடந்த காலங்களில் ஆக்கினைத் தீர்ப்பைக் கொண்டு வந்த அதே தேவன் மறுபடியும் அப்படிச் செய்ய முழுத்திராணியுள்ளவராக இருக்கிறார் என்றார். யூதாவில் இதே போல் எழுதப்பட்டிருப்பது சாட்சியமாகிறது. தேவன் தூதர்களைத் தப்ப விடாதிருந்திருப்பாரேயாகில், அவர் நோவா காலத்து உலகைத் தப்ப விடாதிருந்திருப்பாரேயானால், சோதாமையும் கொமோராவையும் அவர் தப்ப விடாதிருந்திருப்பாரேயானால் ... இப்படிப்பட்ட தண்டனைகள் தொடர்ந்து நடக்கத்தான் செய்யும், என்பதை நாம் எதிர்பார்க்கலாம். “பிறகு கள்ளப் போதகர்களையும் அவர் தப்ப விடமாட்டார். அவர்களும் கூட நியாயந்தீர்க்கப்படுவார்கள்.” இப்படி பயன்படுத்தும் விதம் போதிய தெளிவுள்ளதாயிருந்த போதிலும், பேதுரு அப்படிச் சொல்லவில்லை. சில மொழிபெயர்ப்புகள் “பின்னர்” எனும் வார்த்தையை வசனம் 9ல் பயன்படுத்தி வாக்கியத்தை நிறைவு செய்துள்ளனர், ஆகிலும் இந்த முயற்சி ஒரு செயற்கையானதே.*

***வசனம் 4.*** *வாசகர்கள் இந்த வசனத்தில் சொல்லப்படுகிற* ***தூதர்களைக்*** *குறித்த கோட்பாடாக்குவது பற்றிக் கவனமாக இருக்க வேண்டும், இந்த வசனத்தில் அது சாத்தானின் தோற்றம் குறித்த ஒரு கோட்பாட்டிற்கான பொருளில் சொல்லப்படவில்லை. தூதர்கள் ஒரு தற்செயல் நிகழ்ச்சி; தேவனுடைய நியாயத்தீர்ப்பு பற்றிய பாடம் இது. தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையிலான தொடர்பில் தூதர்களின் செயல்பாடாக பேதுரு இதிலே எதுவும் குறிப்பிடுவதில்லை, அவர்களுடைய சிருஷ்டிக்கப்பட்ட நிகழ்வு குறித்து அவர் எதுவும் குறிப்பிடவில்லை, அதேபோல அவர்கள் நியாயந்தீர்க்கப்பட ஏதுவாக என்ன பாவத்தைச் செய்தார்கள் என்றும் எதுவும் குறிப்பிடவில்லை. வாசகர்கள் தூதர்களைக் குறித்து கேள்வி கேட்கும்படி அவர்களுடைய பெயர் குறிப்பிடப்படுகிறது என்று நாம் சொல்லுவதே சிறப்பானது.*

*தூதர்கள், பிசாசுகள் (பேய்கள்) மற்றும் சாத்தான் ஆகியவை குறித்து திருமறையில் ஒரு புதிராக உள்ளது என்று நாம் அறிக்கையிடுவோம். எபிரெயப் பதமாகிய mal'ak மற்றும் கிரேக்கப்பதமாகிய angelos ஆகியன ஒரு பொதுவான பதமாகச் சொல்லப்படுகிறது, அதன் பொருள் “செய்தியாளன்.” ஏதாவது ஒரு நிகழ்வில் தேவன் ஜனங்களிடத்தில் செய்தியாளர்களை அனுப்புவார். சில தூதர்களுடைய பெயர்களும்கூட குறிப்பிடப்பட்டுள்ளன: மிகாவேல் மற்றும் காபிரியேல் போன்றவர்கள். அதிகப்படியாக வேறொன்றும் சொல்வதற்கில்லை எப்படியிருப்பினும் அது ஒரு பெரிய அளவில் அதிகமாக சொல்லிக் கொள்ளத் தக்க வகையில் ஜனங்கள் யூகப்படுத்தும்படி இடமளிப்பதில்லை. யோபு மற்றும் சங்கீதப் புத்தங்களில் பரலோகத்திலே ஒன்று கூடி ஆலோசனை நடத்துவது*

குறித்துப் பேசும் போது, சொல்லப்படும் காரியங்கள் நேரடிப் பொருளுக்கும் கீழாகத் தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். தேவதூதர்களுக்கு உயர்வான பட்டமாக கேரூபிம், சேராபீம் என்றெல்லாம் அழைப்பது முற்றும் யூகமேதேவனிடமிருந்து வரும் செய்தியாளர்களின் தோற்றம் திருமறை சாரம்ஸத்தில் குறிப்பிட்ட காலம் வரை தோற்றமளிக்கிற காரியம் மட்டுமே. அப்படிப்பட்ட ஜீவன்கள் இருக்கின்றன எனலாம். அவ்வளவுதான் நமக்குத் தெரியும்.

2 பேதுரு 2:4ல் "பிசாசு" என்றோ "சாத்தான்" என்றோ வார்த்தை காணப்படுவதில்லை.[4] இருப்பினும் இந்த வசனம் அவனுடைய ஆரம்பத்தோற்றத்தைக் குறிப்பது போல் எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஒரு நீண்ட கால பாரம்பரியமாக சாத்தான் என்பவன் ஒரு தூதனாக இருந்தவன் என்றும் அவனுடைய பெருமை தேவனுக்கு எதிராக கலகம் பண்ண வைத்தது என்றும் சொல்லப்படுவதுண்டு. இந்தக் கருத்துக்கு திருமறை ஆதார வாக்கியங்கள் தேவைப்படுகிறது, யோவானால் வெளிப்படுத்தின விசேஷம் 12ல் மிக உயர்ந்த உருவகச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது, அது யோவானின் (கண்ட) தரிசன வார்த்தைகள். இந்த வசனத்திலிருந்து சாத்தானின் தோற்றம் குறித்து பேசப்படும் உபதேச ஆபத்திலிருந்து பாதுகாத்து ஒத்த வாக்கியத்தை அமைப்பது மிகவும் கடினமானது. இயேசு, "சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைத் கண்டேன்" என்று சொன்ன போது (லூக்கா 10:18), அவர் சாத்தானின் ஆவிக்குரிய வீழ்ச்சி குறித்து பேசிக் கொண்டிருந்தார் என்பதை இந்த வசனப்பகுதி தெளிவாக்குகிறது, அது எழுபது பேரின் ஊழியத்தில் நிகழ்ந்த செயல். எசேக்கியேல் 28 போன்ற வசனப்பகுதிகள் தீரு போன்ற பட்டணங்கள் மீது கொடுக்கப்படும் அழிவு குறித்துப் பேசுகிறது. அந்த அதிகாரத்தில் ஏதேன் தோட்டம் ஒப்பிடப்படுகிறது, சாத்தானின் தோற்றம் குறித்து அந்த அதிகாரம் பேசுவது போன்ற கண்ணோட்டத்தில் பார்த்தால் அது ஆர்வமளிக்கக் கூடியதாக இருக்கிறது. தேவதூதர்களைப் போலவே, சாத்தானும் திருமறையில் தோன்றுகிறான். சாத்தான் எப்படி மனுஷனுடன் தொடர்பு உடையவனாகவோ அல்லது பாவஞ் செய்யத் தூண்டுகிறவனாகவோ செயல்படுகிறான் என்பது தெளிவாகத் தெரிய வில்லை. அவன் என்ன செய்தாலும், மனுஷனுடைய கடமையினின்று விடுபட அது தெளிவானதாயில்லை.

இவ்விஷயம் குறித்து நாம் சொல்லக் கூடிய தெல்லாம், எங்கேயோ, ஏதோ ஒரு சமயம் தேவ தூதர்கள் **பாவம் செய்துள்ளனர்**. பேதுரு திருமறையிலிருந்து ஒரு எடுத்துக் காட்டாக தூதர்கள் பாவஞ் செய்ததை வசனமேற்கோள் எனக்காட்டினால், அது ஆதியாகமம் 6:1-4தான் சரியான ஒத்தவாக்கியமாக இருக்கக் கூடும். ஜலப்பிரளைத்துக்கு சற்று முன்பாக, ஆதியாகமத்தில் பதிவு செய்துள்ளபடி, "தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துகொண்டார்கள்." இங்கே இந்த வசனப் பகுதியில் சிருஷ்டிகளின் துன்மார்க்கம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் விளைவாக தேவன் ஜலப்பிரளயத்தை வருவித்தார். ஆதியாகமம் 6ல் தூதர்கள் எனும் பதம் பயன்படுத்தப்படவில்லை என்ற நிலையில், "தேவகுமாரர்" எனும் பதம் யோபு 1:6ல் சொல்லப்படுவதுபோல் பரலோக ஜீவிகளை குறிப்பிடுவதாக

இருக்கலாம்.

ஆதியாகமம் 6:2ல் குறிப்பிடப்படுகிற "தேவகுமாரர்" எனும் பதம் பேதுரு குறிப்பிடும் தூதர்களுக்குச் சமமானது என்ற முடிவுக்கு வர வேறுசில பரிசீலனைகளும் அடிக்கடி மேற்கோளாக குறிப்பிடப்படுவதுண்டு. ஆதியாகமம் 6:2ல் சொல்லப்பட்டுள்ள "தேவகுமாரர்" குறித்து புதிய ஏற்பாட்டு நாட்களில், ரபீமார்கள் மிகப் பெரும் ஆர்வம் காட்டினர், ஏறத்தாழ அதிலேயே உறுதிப்பட்டிருந்தனர். 1 ஏனோக்கின் காலத்திலிருந்து ஒரு ஆர்வமிக்க பணி நடந்தது, அது ஆதியாகமம் 6ம் அதிகாரத்தை அழகுறச் செய்கிறது. யூதாவில் 1 ஏனோக்கின் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்டியிருப்பதால், பேதுரு, யூதா இருவருமே அதைக் குறித்து அறிந்திருந்தனர் என்று சொல்லுவது மிகப் பாதுகாப்பானது. மேலும், பேதுரு நோவாவின் காலத்தில் உலகின் மேல் வந்த நியாயத்தீர்ப்புக் குறித்து மூன்று முறை தன்னுடைய இரண்டு நிருபங்களில் குறிப்பிட்டுள்ளார் (1 பேதுரு 3:20; 2 பேதுரு 2:5; 3:6). "தேவ குமாரர்" எனும் வார்த்தை ஜலப்பிரளயத்தை அறிமுகப்படுத்தும் அதிகாரத்தில் துவங்குகிறது.

முடிவில் சாட்சியம் நிச்சயமற்றதாயிருக்கிறது, ஆதியாகமம் 6ல் குறிப்பிடப்பட்டுள்ள "தேவகுமாரர்" எனும் பதம் பேதுருவின் மனதில் இல்லாமலேயே தூதர்களை நகரத்திலே தள்ளினார் என குறிப்பிட்டிருக்கலாம். அப்படி அவர் சொல்லாதிருந்தால், பாவஞ்செய்த தூதர்களைப் பற்றி பேசுகிற பயனிலைச் சொல் பழைய ஏற்பாட்டில் வேறு எங்கும் பயன்படுத்தப்பட்ட வசனப்பகுதியை கண்டு பிடிப்பது கடினம். யூதாவும் தூதர்கள் மேல் வந்த நியாயத்தீர்ப்புக் குறித்து ஒப்பிட்டு எழுதினார், ஆகிலும் அவர்கள் தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக் கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்கள் என்று அவர்களைக் குறிப்பிடுகிறார். பேதுரு குறிப்பிட்டதைக் காட்டிலும் யூதா மேலும் விளக்கம் எதுவும் அளிக்கவில்லை, அதிலும் குறிப்பாக தூதர்களின் குறிப்பிட்ட பாவம் இன்னதென்று விளக்கமளிக்கவில்லை.

பாவஞ் செய்த தூதர்களை தேவன் தப்பவிடாமல், ... நரகத்திலே தள்ளி ... என்று பேதுரு சொன்னார். "நரகத்திலே ... தள்ளி" எனும் வார்த்தை *(tartaroo)* ஒரு வினைச் சொல்லாகும் அதின் பொருள் *tartaroo*க்கு ("வேதனைமிகுந்த இடத்திற்கு") ஒப்புக் கொடுக்கப்பட்டவர்கள்" என்பது. புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது, அஞ்ஞானிகளின் இலக்கியத்தில், வேதனையுள்ள இடம் என்பது பாதாள உலகின் ஒரு பகுதி அங்கே டைட்டானும், ஒலிம்பிய கடவுள்களின் மூதாதைகளும், அங்கே ஒப்புக் கொடுக்கப்பட்டிருந்தார்கள். பேதுரு அநேகமாக இந்த வார்த்தையை தெரிந்து கொண்டிருக்கக்கூடும், ஏனெனில் மனிதர்களுக்கு மேலான சக்திகள், இங்கே தூதர்கள், யாவரும் அவனுடைய பிரச்சனைகள். ஒரு யூகத்தில் சொன்னால், துன்மார்க்க ஜனங்கள் யாவரும் பாதாள (உலக) த்தில் பங்கடையும்படி ஒப்புக் கொடுக்கப்பட்டனர் என்று சொல்லியிருக்கக் கூடும்.

சில மொழிபெயர்ப்புகளில் தேவதூதர்கள் "அந்தகாரச் சங்கிலியினால்" கட்டி [*seirais*] என்று சொல்லுகிறது, வேறு மொழிபெயர்ப்புகளில், "அந்த காரக் குழியில்" [sirois] என்று வாசிக்கலாம். NASB திருமறை பின்னதாகச் சொல்லப்பட்ட சொற்றொடராகிய அந்தகார குழியில் என்பதை ஆதரிக்கிறது. நாம் எந்த மொழிபெயர்ப்பைத் தெரிந்து கொண்டாலும் கருத்து குறைவாகவே

வித்தியாசப்படுகிறது. சொல்லப்பட்டுள்ள "சங்கிலியோ" "குழியோ" தெளிவாக உருவகமாகப் பேசப்படுகிறது. ஆவிக்கு ஜீவிகளுக்கு நேரடிப் பொருள் கொடுக்கும் (மாம்சப்பிரகாரமான) சங்கிலியோ குழியோ அர்த்தமற்றது. நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக என்பது தூதர்கள் கர்த்தருடைய இரண்டாம் வருகையின் போது இடம் பெறப் போகிற காட்சியாகிய தேவனுக்கு முன்பாக எல்லாரும் நிற்பதைதான் குறிப்பிடுகிறது.

**வசனம் 5.** அப்போஸ்தலன் தொடர்ந்து கள்ளப்போதகர்கள் மீது நிச்சயமாக வரும் நியாயத்தீர்ப்பை உறுதிப்படுத்துவதில் கவனமாக இருந்தார். தேவன் தூதர்களையே தப்பவிடவில்லை என்றால், அவர் **பூர்வ உலகத்தையும் தப்ப விடவில்லை** ஆதியாகமம் 6ல் தேவகுமாரர்கள் மனுஷகுமாரத்திகளை மனைவியாக தெரிந்துகொண்டதைக் குறித்த விளக்கத்தை கொடுத்தவுடனேயே ஜலப்பிரளயத்தைப் பற்றிய வரலாறு சொல்லப்படுகிறது. மேலே குறிப்பிட்டபடி, அதைத் தொடர்ந்து வந்த நிகழ்வுகளும் சில ஆதாரமாக "தூதர்கள்" என்பது 2:4ல் குறிப்பிடுவது ஆதியாகமம் 6 ல் சொல்லப்படுவதற்கு சமமானது. பேதுருவைப் போலவே யூதாவும் தேவன் அநீதியை நியாயந்தீர்த்த மூன்று உதாரணங்களை ஒப்பிடுகிறார். இரண்டு உதாரணங்கள் ஒரே மாதிரியாக இருந்த போதிலும், யூதா குறிப்பிடுகையில் ஜலப்பிரயத்திற்குப் பதிலாக இஸ்ரவேலின் மீது வனாந்தரத்தில் தேவன் கொண்டு வந்த நியாயத்தீர்ப்பைப் பயன்படுத்தி மூன்றாவது உதாரணத்தைத் தருகிறார் (யூதா 5). பேதுரு ஜலப்பிரளயத்தை தேவனிடத்திலிருந்து வந்த நியாயத்தீர்ப்பாக குறிப்பிட்டு இங்கேயும், 3:5, 6 லும் எழுதுகிறார்; யூதா ஜலப்பிரளயத்தைப் பற்றிக் குறிப்பிடவேயில்லை.

**நீதியைப் பிரசங்கித்தவனாகிய** நோவா என்று அழைத்த பேதுரு யூத மற்றும் கிறிஸ்தவ பாரம்பரியத்தை பின்பற்றுகிறார். அவபக்தியாய் நடக்கிற அவர்களுடைய அக்கிரமக் கிரியைகளைக் கண்டு கேட்டு இருதயத்தில் நோவா வாதிக்கப்பட்டிருப்பார் என்று நினைப்பதில் காரணமுண்டு. அவர் தன்காலத்தில் வாழ்பவர்களை அவர்களுடைய துன்மார்க்கவழியை விட்டுத்திரும்பி நீதியாய் வாழும்படி சம்மதிக்கப் பண்ண முயற்சித்ததை ஒருவர் கற்பனைபண்ணிப் பார்க்கமுடியும். எப்படியிருப்பினும் ஆதியாகமத்தில் நோவா அல்ல, தேவனே மனுஷர்கள் தங்களுக்கு வருவித்துக் கொண்ட நிலைமையைக் குறித்து மனஸ்தாபப் பட்டார்.

> "மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டு; தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது" (ஆதியாகமம் 6:5, 6).

பின்னதாக இந்தப் பதிவேடு மேலும் குறிப்பிடுகையில், "தேவன் பூமியைப் பார்த்தார்; இதோ அது சீர்கெட்டதாயிருந்தது; மாம்சமான யாவரும் பூமியின்மேல் தங்கள் வழியைக் கெடுத்துக் கொண்டிருந்தார்கள்" (ஆதியாகமம் 6:12) என்கிறது.

ஆதியாகமத்தில், நோவா செய்த எந்த பிரசங்கமும் குறிப்பிடப்படவில்லை. அவர் நீதிமான் என்று விவரிக்கப்படுகிறார். தேவன் பேழையைக் கட்டும்படி

கட்டளையிட்ட போது அவர் உத்தம குணமுள்ளவராயிருந்தார். பேதுருவுக்கு நோவா பிரசங்கித்தது அவரது உபதேசத்தின் மையக்கருத்தல்ல. தேவனுடைய நியாயத்தீர்ப்பே கருத்தாய் இருந்தது. பேதுரு தனது நிருபங்களை எழுதின கள்ளப்போதகர்கள் கலங்கடித்துக் கொண்டிருந்த சபையார்கள் ஜலப்பிரளயக் காலத்தில் உலகில் தேவனால் கொடுக்கப்பட்ட நியாயத்தீர்ப்புக் குறித்து கவனம் செலுத்த வேண்டியவர்களாயிருந்தார்கள்.

NASB யும் பெரும்பாலான மொழிபெயர்ப்புகள் போலவே, கிரேக்கச் சொற்றொடரை சுருக்கிக் கொடுக்கிறது. நோவா மற்றும் ஏழு பேரைக் காப்பாற்றி என்று பேதுரு சொன்னார். கிரேக்கமொழியின் நேரடிப் பொருளில், "தேவன் எட்டாவதாக நோவாவைக் காப்பாற்றினார்" என்று சொல்லுகிறது. 1 பேதுரு 3:20 லும் அப்போஸ்தலன் "எட்டுப் பேரைக்" குறிப்பிட்டார். அவர்களே ஜலத்தினின்று காக்கப்பட்டார்கள். ஆதியாகம வரலாற்றுப்படி, நோவா, அவரது மனைவி, அவருடைய மூன்று குமாரர்கள், மற்றும் அவர்களுடைய மனைவிகள் (ஆதியாகமம் 8:18). Richard J. Bauckham குறிப்பிடுகையில் "எட்டு" எனும் எண்ணை அப்போஸ்தலன் மிக எச்சரிக்கையாக பயன்படுத்தியிருக்கக் கூடும் என்று நம்புவதாகச் சொன்னார், ஏனெனில் அதன் அடையாளம் முக்கியமானது, ஆதிக்கிறிஸ்தவர்கள் வரவிருந்த யுகம் எட்டாவது நாளுக்கு உரியதாக எண்ணினார்கள், ஆதியாகமம் 1, 2ல் சொல்லப்படுகிற சிருஷ்டிப்பின் நாட்களுக்கு ஒரு நாள் சேர்த்து சொல்லப்பட்டது, மேலும், ஞாயிற்றுக் கிழமையை "எட்டாம் நாளாக", வாரத்தின் மற்ற நாட்களுடன் தனியாக குறிப்பிடப்பட்ட நாளாகச் சொன்னார்கள்.[5]

பிற மனுஷர்களுக்கு, தேவன் **அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின் மேல் ஜலப்பிரளயத்தை வரப் பண்ணினார்.** ஜலப்பிரளயத்தை தேவன் வருவித்த போது தேவன் தாமே நீதியை விரும்பக் கூடியவராகத் தம்மைத் காண்பித்தார். அப்பொழுது உலகத்தை நியாயந்தீர்த்த தேவன் தாமே அதை மறுபடியும் நியாயந்தீர்ப்பார், பேதுருவின் வாசகர்கள் தேவன் எட்டுப் பேரைக் காப்பாற்றினார் என்பதைக் கவனிக்கத் தவறமாட்டார்கள் பாவஞ் செய்த தூதர்களில் கூட ஒருவரும் காப்பாற்றப்படவில்லை, தேவன் பக்தியுள்ளவர்களை ஜலப்பிரளயத்தின் போது, மீட்டு இரட்சித்தார். இறுதி நியாயத்தீர்ப்பு வரும்போது விசுவாசமுள்ளவர்களை, நோவாவைக் காப்பாற்றியது போல, இரட்சித்து பாதுகாப்பார் என்று எதிர்பார்க்கலாம். நோவாவைப் போலவே, பேதுருவின் வாசகர்களும் நீதியை பிரசங்கிக்க வேண்டுமென தேவன் எதிர் பார்த்தார். ஜலப்பிரளயத்தின் காலத்தில் உலகம் அழிவுண்டது போலவே, பாவஞ்செய்த தூதர்களும் அழிவுண்டு போவார்கள் என்பதற்கு ஒத்திருக்கிறது. எட்டுபேர் மீட்கப்பட்டது என்பது ஏதோ ஒரு புதிய ஞானர்த்தத்தைக் கொடுக்கிறது.

**வசனம் 6.** முன்பு செய்தது போலவே, தேவனுடைய நியாயத்தீர்ப்பு குறித்த உதாரணத்திற்கு மூன்றாவதாக ஆதியாகமத்திலிருந்தே எடுத்துக் காட்டுகிறார். தேவன் பாவஞ்செய்த தூதர்களை நியாயந்தீர்த்து, ஜலப்பிரளய காலத்து உலகத்தை அழித்திருப்பதுபோல, **சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப் போட்டார்.** சோதோம் கொமோரா பட்டணங்கள் திருமறையில்

கணிசமான கவனத்தைத் திருப்பியுள்ளன. ஆதியாகமம் 19ல் அவர்களுடைய அழிவு சம்பவங்கள் பதிவு செய்யப்பட்ட பின், மோசேயும் தீர்க்கதரிசிகளும் அடிக்கடி தேவன் அழித்த அவபக்தியுள்ள ஜனங்களுக்கு ஒப்பிட்டு இவர்களை இஸ்ரவேலருக்கு திருஷ்டாந்தமாக வைத்துப் பேசினர் (உபாகமம் 29:23; 32:32; ஏசாயா 1:9, 10; 3:9; 13:19; எரேமியா 23:14; 49:18; 50:40; புலம்பல் 4:6; எசேக்கியேல் 16:46-56; ஆமோஸ் 4:11; செப்பனியா 2:9). மத்தேயுவிலும் லூக்காவிலும் சோதோமைக் குறித்து ஐந்து குறிப்புகள் காணப்படுகின்றன. மற்றும் பவுல் ஒரு முறை அந்தப் பட்டணத்தை குறிப்பிட்டுப் பேசினார்.

பேதுருவும் யோவானும் இந்தப் பட்டணங்களை ஒப்பிட்டு தேவனுடைய நியாயத்தீர்ப்பின் நிச்சயத்தைக் குறித்து எழுதினர். இவைகள் சம்பவித்த காலத்திலிருந்து எழுதப்பட்டவைகள் சுமாராக புதிய ஏற்பாட்டின் சமகாலத்து சம்பவங்களாகும், அவை யூத மற்றும் கிறிஸ்தவ கால நிகழ்வுகளை ஒப்பிட்டு தேவனுடைய நியாயத்தீர்ப்பு துன்மார்க்கரின் மீது வருவதற்கு அடையாளமாக சோதோம் கொமோராவை உதாரணமாக்கினர். ஜோசிபஸ் எனும் வரலாற்று ஆசிரியர் லோத்துவின் மனைவி உப்புத்தூணாக்கப்பட்ட உருவத்தை பார்த்ததாக குறிப்பிடுகிறார்.[6] பேதுரு பொதுவான பதத்தில் பட்டணங்களின் துன்மார்க்கத்தைக் குறிப்பிட்டார், ஆனால் யூதா அவர்களின் ஓரினச் சேர்க்கையின் பாவத்தை குறிப்பாக எழுதுகிறார் (யூதா 7 ற்கான விளக்கவுரையைக் காண்க). இந்தப் பாவம் "சோதோமின் பாவம்" என்ற பட்டணப்பெயரை அடையாளமாகப் பெற்றுக் கொண்டுள்ளது.

பேதுரு பட்டணங்கள் மீது தேவன் கொண்டு வந்த நியாயத்தீர்ப்பை குறிப்பாகப் பேசினார். அவர் அவர்களின் பட்டணங்களை அழித்து சாம்பலாக்கினார். பாரம்பரியமாக, யூதர்கள் சோதோம் கொமோராவை சவக்கடலின் சுற்றுப்புறங்களிலிருந்த பட்டணங்களுக்குள் இருந்ததாக குறிப்பிட்டனர். சவக்கடலைக் சுற்றிலுமிருந்த, பட்டணங்கள் உப்புக்கலந்த, வறட்சி மிகுந்த, மற்றும் மலட்டுத் தன்மையுள்ள (எதுவும் விளையாத) பூமியாக இருந்தது. அந்த பூமி சாம்பலாக்கப்பட்டது என்றே எடுத்துக் கொள்ளலாம். ஒரு பழங்கால பூகோள நிபுணர் பேதுருவின் காலத்தில் வாழ்ந்த பூகோள நிபுணர் ஒருவர் சவக்கடலைச் சுற்றியிருந்த பகுதியை "சாம்பல் நிலம்" என்று விவரித்தார். பேதுரு குறிப்பிட்ட (*tephroō*) என்ற வினைச் சொல்லைப் போல அதே பதத்தில் "சாம்பல்" எனும் வார்த்தையை பயன்படுத்தியுள்ளார்.[7] அதே போல லூக்கா 17:26-30ல், நோவாவின் நாட்களில் என்று இயேசு பயன்படுத்தியது போலவே, அப்போஸ்தலனும் நோவாவின் நாட்களில் (நோவா காலத்து உலகத்தில்) என்று குறிப்பிட்டு நியாயத்தீர்ப்பு ஜலத்தினால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது, மற்றும் சோதோம் கொமோரா பட்டணங்கள் அக்கினியால் அழிக்கப்பட்டது என்று உதாரணப் படுத்துகிறார்.

சோதோம் கொமோராவுக்கு சம்பவித்தவைகள் பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகள் திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கின்றன. "திருஷ்டாந்தமாக" எனும் வார்த்தை (*hupodeigma*) ஒருவர் பின்பற்ற வேண்டிய நேர்மறை உதாரணமாக குறிப்பிடப்படலாம், அல்லது ஒருவர் தவிர்க்க வேண்டிய எதிர்மறை உதாரணமாக குறிப்பிடப்படலாம். உள்ளடக்கும் வசனப்பகுதிதான் அது எதைக் குறிப்பிடுகிறது எனத் தீர்மானிக்க முடியும். இதில் ஆர்வமளிக்கும் காரியம்

*என்னவெனில் கிறிஸ்தவர்கள் பின்பற்ற வேண்டிய முன் மாதிரி இயேசு என்று குறிப்பிடப்பட்ட போது (1 பேதுரு 2:21), எழுத்தாளர் வேறொரு வார்த்தையைப் பயன்படுத்தினார், அது மிகப் பொருத்தமான வகையில் நேர்மறை உதாரணத்துக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. பேதுரு கள்ளப் போதகர்களை மனதிற் கொண்டு, "அவபக்தியாய் நடப்பவர்களுக்கு" தேவன் கொடுக்கும் அழிவு சோதோம் கொமோராவுக்கு ஒப்பான நியாயத்தீர்ப்பாக இருக்கும் என்று சொன்னார்.*

***வசனம் 7.*** பேதுருவின் குறிப்பு நோவாவின் கால உலகத்துக்கு குறிப்பிட்ட போது, அவர் சிக்கலான பகுதிக்கு விடிவு ஏற்படுத்தும் பொருட்டு நியாயத்தீர்ப்பை மிருதுவான வார்த்தைகளால் தனது வாசகர்களுக்கு நினைப்பூட்டுகிறார், அதில் தேவன் பக்தியாயிருந்த எட்டுப்பேரை தேவன் காப்பாற்றினார் என்று சொல்லுகிறார். அதேபோல, தேவன் சோதோமின் மேலும் கொமோராவின் மேலும் அக்கினியை வருஷிக்கப் பண்ணினபோது, **நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்தார்** என்றார். இதில் சிந்திக்க வேண்டிய கருத்து என்னவெனில், கடந்த காலங்களில் தேவன் பக்தியுள்ளவர்களை காப்பாற்றினது போல, அவர் இப்பொழுது கள்ளப் போதகர்கள் நியாயந்தீர்க்கப்படும்போது, அவர் பக்தியாயுள்ளவர்களையும், காப்பார். இருப்பினும், பேதுரு லோத்துவைக் குறித்த விவாதத்தில் இறங்கிவிட்டார் ஆதலால் தமது கருத்துக்களை முடித்திருக்கவில்லை.

இந்த வசனம் ஒரு நெடிய, தொகுப்பு வாக்கியமாக 2:4ல் ஆரம்பித்ததில் "தேவன் தப்பவிடாமல்" என்பதின் ஒரு பகுதியாக இருக்கிறது. வசனம் 7ல், NASB மொழிபெயர்ப்பில் இந்த வார்த்தை (தப்பவிடாதிருந்) தால் என்று சாய்வு எழுத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, அதினாலே வாசகர்களுக்கு மொழிபெயர்ப்பாளர்கள் சுட்டிக்காட்டுவது ஆங்கில வாக்கியத்தினிமித்தம் அப்படிச் சேர்த்துள்ளனர். இந்த "... ஆல்" எனும் வார்த்தை "பின்பு" எனும் வார்த்தைக்கு 2:9ல் கொண்டு சேர்க்கிறது. மேலும் அது நிலைப்படுத்தப்பட்ட வாக்கியத்தின் முழுமை "... ஆல்" என்பதை 2:4ன் பிரிவில் எதிர்பார்த்து அதன் விளைவால் "பிறகு தேவன் கள்ளப் போதகர்களையும் தப்பவிடமாட்டார்" என்று (2:1-3ல் குறிப்பிடப்பட்ட அதே போதகர்கள்) முடிக்கிறார், ஆனால் பேதுரு ஒருபோதும் தனது சிந்தனையை முடிக்கவில்லை. மாறாக, லோத்துவைக் குறித்து அவர் எழுதியது துவக்கக் கருத்திலிருந்து விலகிப் போகவும் ஒரு புதிய திசைக்கு வழிநடத்தவும் செய்தது.

பேதுரு லோத்துவை "நீதிமான்" என்று அழைப்பது, மேலும் அவர் **அவர்களுடைய காமவிகார நடக்கையால் வருத்தப்பட்டு,** ... என்பது ஆச்சரியமாயிருக்கிறது நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க என்று சொன்னார். ஆதியாகமம் 13:1-13ல் லோத்தின் கதையை ஒருவர் வாசிக்கையில், "நீதிமான்" எனும் குணப்பெயர்சொல் நமது மனதில் தோன்றுவதில்லை. அவனுடைய சித்தப்பாவாகிய ஆபிராம் அவன் தனது ஆட்டுமந்தையைக் காத்துக் கொள்ள ஏதுவான நிலத்தை தெரிவு செய்து கொள்ளும்படி வாய்ப்புக் கொடுக்கிறார். லோத்து மிகவும் செழிப்பாய்த் தோன்றிய யோர்தான் சமவெளியைத் தெரிந்து கொண்டார். "சோதோம் வரை அவன் கூடாரத்தைக் கொண்டு போனான்" (ஆதியாகமம் 13:12) பட்டணம் எவ்வளவாய் அக்கிரமம் உள்ளதாக இருந்தது

என்று கவலைப்படவில்லை.

பேதுரு லோத்தை "நீதிமான்" என்றழைத்தார், ஏனெனில் அவன் தேவதூதர்களை ஏற்றுக் கொண்டு செய்த உபசரிப்பை அவர் நினைவுகூர்ந்தார் (ஆதியாகமம் 19:1-3). மேலும், வரவிருந்த நியாயத்தீர்ப்புக்காக லோத்துக்கு தேவன் கொடுத்த எச்சரிக்கையில் பட்டணத்தை விட்டு விலகிப் போகச் சொன்னார், என்பது ஆபிரகாமின் சகோதரனின் மகன் அந்தப் பட்டணத்தால் முழுமையாய் கெட்டுப்போய் விடவில்லை என்பதை மறைமுமாய் உணர்த்துகிறது. முடிவில், நாம் பேதுருவின் வார்த்தையை நம்ப வேண்டும். பேதுரு லோத்துவைக் குறித்து நாம் ஆதியாகமத்தில் வாசித்துத் தெரிந்து கொள்ளாத ஏதோ ஒன்றை சொல்லியிருக்கிறார். ஆதியாகமத்தில், லோத்து தனது அயலார்களின் நடவடிக்கைகளால் "தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்டிருந்தார்" என்பதற்கு எந்த அறிகுறியும் இல்லை. இருப்பினும், அவனுடைய பக்தியுள்ள நடத்தையே அவனை தேவன் தேசத்திலே அழிவு வந்தபோது ஏன் மீட்டுப்பாதுகாத்தார் என்பதற்கான நல்லதொரு விளக்கமாகும்.

***வசனம் 8.*** ஒருவேளை லோத்து ஆதியாகமத்தில் எப்பொழுதும் தயவின் வெளிச்சத்தில் காட்டப்படவில்லை, ஆனால் பேதுரு அவனுடைய நீதியைக் குறித்து விளாவாரியாகப் பேசுகிறார். லோத்தின் **நீதியுள்ள இருதயம்** அவர்களுடைய அக்கிரம செய்கைகளைக் **கண்டும் கேட்டும் வாதிக்கப்பட்டது**. சோதோமின் ஜனங்களுடைய பாவங்களைப் பார்த்துக் கொண்டு அமைதியாக இருந்து விடாமல் அவை அவனுடைய இருதயத்தை வாதிக்கச் செய்திருந்தது. தன்னைச் சுற்றி நடந்து கொண்டிருந்த பயங்கரமான காரியங்களைக் கண்டு கேட்டுக் கொண்டிருந்த போது அவர் ஒரு பாரத்தைச் சுமப்பது போல் உணர்ந்தார்.

அதே போல, பேதுருவின் வாசகர்கள் கொடூரமும், சிற்றின்ப களியாட்டுக்களும், விக்கிரகாராதனைகளும் சாதாரணமாக அன்றாட வாழ்வில் நடந்து கொண்டிருந்த உலகில் வாழ வேண்டியவர்களாயிருந்தார்கள். அப்போஸ்தலனின் குறிப்பிட்டுக் காட்டப்பட்ட செய்தி இரண்டு பகுதிகளாகும்: (1) தேவன் அவபக்தியுள்ளவர்களை தண்டிக்கும்போது, பக்தியுள்ளவர்களைத் தப்புவிக்கிறார். (2) கிறிஸ்தவர்கள் உலகத்தில் பாவத்தோடு ஒத்துப் போய் விடக்கூடாது, இல்லாவிடில் அவர்களும் அவபக்தியுள்ளவர்களுக்கு வைத்திருக்கிற நியாயத்தீர்ப்பில் பங்குபெற வேண்டியதுதான். லோத்தின் உதாரணத்திலிருந்து, கிறிஸ்தவர்கள் பாவத்தை இயல்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதை அறிந்து கொள்ளக் கூடும். லோத்து சோதோமை விட்டு போய் மரணத்திலிருந்து தப்பித்துக் கொண்ட போதிலும், தேவபக்தியற்ற ஜனங்களோடு வாழ்ந்ததால் சகல விளைவுகளுக்கும் தப்பிக் கொள்ள இயலவில்லை. அவன் தன்னுடைய சகல சொத்துக்களையும் தன்மனைவியையும் இழந்தான். தேவன் பாவியை இறுதி அழிவிலிருந்து மீட்டாலும், பாவத்தோடு விளையாடுவதன் அதன் விளைவு இருக்கின்றன.

***வசனம் 9.*** நாம் 2:4ல் தொடங்கிய நெடிய வாக்கியத்தின் முடிவுக்கு கடைசியாக வருகிறோம், முடிவு ஒருவேளை நாம் எதிர்பார்த்தாய் இல்லாதிருந்தாலும் முடிவுக்கு வருகிறோம். வாக்கியம் நியாயத்தீர்ப்பில் துவங்குகிறது; அது தேவ பக்தியுள்ளவர்களை தப்புவிக்கவும்

அவபக்தியுள்ளவர்களை நியாயந்தீர்க்கிறதுமான முடிவைப் பெறுகிறது. பேதுரு தன்னுடைய வாசகர்களுக்கு உறுதியளித்து சபையை கலங்கடித்துக் கொண்டிருந்த கள்ளப் போதகர்களின் கிரியைகளைத் தேவன் அறியாமலில்லை என்பதைக் குறிப்பிடும்படி பேதுரு மூன்று முன்னுதாரணங்களை வசனத்திலிருந்து எடுத்துக் காட்டி, அக்கிரமக் காரர்களை தேவன் நியாயந்தீர்க்கிறார் என்று சொன்னார்: (1) பாவம் செய்த தூதர்கள், (2) நோவாவின் நாட்களில் ஜலப்பிரளயத்தின் போது இருந்த உலகம் மற்றும் (3) சோதோம் கொமோரோ. கடைசி இரண்டு நிகழ்வுகளில் தேவன் அளித்த விடுதலையையும் தொடர்புபடுத்தினார்: கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களை ... இரட்சிக்கவும் அறிந்திருக்கிறார். “சோதனை” *(peirasmos)* என்பது பரிசோதனைகள். நோவா தன் நாட்களில் வாழ்ந்த ஜனங்கள் பாவத்தினால் மட்டுமே நிறையப்பட்டிருந்த அவர்களுக்குள் வாழ்ந்த போது சோதனைகளைச் சந்தித்தார். லோத்து தன்னுடைய அக்கிரமம் நிறைந்த அயலார்கள் ஆக்கினைக் குள்ளாக்கப்பட்ட நிலையிலிருக்கையில் அவனுடைய இருதயம் வாதிக்கப்பட்டது. ஒவ்வொரு நிகழ்வுகளிலும் தேவன் அழிவைக் கொண்டு வரும்போது, நீதிமான்களை காத்து இரட்சித்தார்.

எல்லோருமே சோதனைகளை எதிர்த்து நின்று போராடும் வலிமை பெற்றவர்களாயிருக்க இயலாது. இயேசு தம்முடைய சீஷர்களிடம், “எங்களைச் சோதனைக்குட்பட பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்” என்று ஜெபிக்கச் சொன்னார் (மத்தேயு 6:13). கள்ளப் போதகர்கள் பேதுருவின் வாசகர்கள் சிலரை தங்கள் வசப்படுத்துவார்கள். சிலர் இயேசுவில் கொண்டுள்ள விசுவாசத்துக்கு புறமுதுவைக் காட்டுவார்கள். கர்த்தரையே சார்ந்திருந்தவர்கள் யாரோ, பேதுருவின் அப்போஸ்தலிக சாட்சியத்தைக் கவனித்திருந்தவர்கள் யாரோ சோதனைக்கு எதிர்த்து நின்றவர்கள் யாரோ, அவர்களுக்கு விடுதலையுண்டு. தேவன் நோவாவை அவருடைய அவபக்தி நிறைந்த சகாக்களிடமிருந்து அற்புதமாக மறைத்துக் கொண்டு போய் விடுதலை செய்யவில்லை. விசுவாசத்தினாலே நோவா தனக்கு ஒரு பேழையை உண்டு பண்ணினான் (எபிரெயர் 11:7). விடுதலையாகிறவனுக்கு அந்த விடுதலை விலையற்றதல்ல. தேவன் பாவம்நிறைந்த சோதோமிலிருந்து லோத்துவுக்கு விடுதலையளித்தார், ஆகிலும் குறிப்பிட்ட செயலூக்கத்தின் போது, அவன் தன் ஆஸ்திகளையும் மனைவியையும் இழந்தான். இதிலே ஒரு நேர்எதிர்கோடு அல்லது வஞ்சப் புகழ்ச்சி அணி என்னவெனில், தனக்கு ஆஸ்திகளை சம்பாதிக்க வேண்டும் என்பதற்காகவே அவன் யோர்தானின் சமவெளியில் தங்கும்படி தெரிந்து கொண்டான். முடிவிலே அவனுக்கு எதுவும் மிஞ்ச வில்லை. லோத்தை தேவன் தப்புவித்ததற்கு விலையில்லாமலில்லை. தப்புவிக்கப்படுதல் அவ்வளவு எளிதானது என்று தேவன் வாக்குறுதி கொடுக்கவில்லை. அவர் விடுதலை பெறுபவரின் முயற்சியின் செயலின் மூலம் விடுதலையளிக்கிறார். “பக்தியுள்ளவர்களை தேவன் விடுதலை செய்யும்போது” பாவம் அதற்கு ஒரு கிரயத்தை எதிர்பார்க்கிறது.

மனிதனுடைய காரியங்களில் தேவனுடைய நீதி செயல்படும் போது அது உடனடியாக தெளிவாகத் தெரிவதில்லை. பேதுரு தன்னுடைய வாசகர்களுக்கு அளித்த உறுதி அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியையும் பாடுகளையும் தேவன் கவனித்திருக்கிறார் என்பதே. மேலும்,

*கள்ளப் போதகர்களின் அவபக்தியான வழியையும் அவர் அறிந்திருக்கிறார். தப்புவிக்கும் வழியும் தேவனுக்குத் தெரியும். அவர்* ***அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளாக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும்*** *அறிந்திருக்கிறார். கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படையே இரட்சகராக வந்த கர்த்தர், சிலுவையிலே மரித்தார், தேவனுடைய வலது பாரிசத்தில் அமர்ந்து ஆளுகை செய்யும்படி பரமேறிச் சென்றார், மறுபடியும் வருகிறார் என்பதுதான். "கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு ... இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்" (எபிரெயர் 9:28). அவர் இரண்டாம் முறை தரிசனமாகும் போது, "கண்கள் யாவும் அவரைக் காணும்," "நாவுகள் யாவும் அறிக்கையிடும்" (பிலிப்பியர் 2:11). அந்த வேளையில், தேவன் அவபக்தியுள்ளவர்களை நியாயந்தீர்ப்பார். தேவனுடைய நீதி முற்றிலும் வெற்றிகொள்ளும்; ஆகிலும் அவர் வரும்வரை, உலகில் சோதனைகள் இருக்கும். இப்பொழுது பேதுருவின் நிச்சயமான வார்த்தைகள் என்னவெனில், அவர் வருவதற்கு முன், தேவன் பக்தியுள்ளவர்களை விடுவிப்பார் என்பதே.*

***வசனம் 10.*** *புதிய ஏற்பாட்டு அதிகாரங்களும் வசனங்களும் ஒரு பிரெஞ்சு நாட்டு வெளியீட்டாளாராகிய* Stephanus *என்பவரால் பதினாறாம் நூற்றாண்டில் பகுக்கப்பட்டன. பெரும்பாலான சம்பவங்களில், இந்த பிரிவுகள் நியாயமானவை; வாசகர்களுக்கு அவை சிறப்பாக சேவை செய்கின்றன, ஆகிலும் சில விஷயங்களில், அவருடைய பணியில் ஒரு வசனத்தை, அல்லது ஒரு அதிகாரத்தைக் கூட சிந்தனையின் நடுவில் குறிப்புகளை விட்டிருக்கிறார். 2 பேதுரு 2:10 மிகக் கீழான பகுப்பைக் குறிக்கிறது என்பதற்கு ஒரு உதாரணம். நாம் இங்கே வசனத்தில் முதல் பகுதியை அலசிப்பார்ப்போம் மீதியை பின்வரும் பகுதியில் பார்ப்போம்.*

*பேதுரு ஏற்கனவே பொதுவான வார்த்தையில் உறுதிப்படுத்தி, "அக்கிரமக்காரர்களை ஆக்கினைக்குள்ளானவர்களாக" வைக்க தேவன் அறிந்திருக்கிறார் என்று சொன்னார். இப்பொழுது குறிப்பாக கைவசமுள்ள கள்ளப் போதகர்களின் பக்கம் கவனம் திரும்புகிறது, அநீதியான போதகர்களை இரண்டு நிலைகளில் குறிப்பிட்டார்: (1) அவர்கள் அசுத்த* ***இச்சையோடே மாம்சத்துக் கேற்றபடி நடந்து, கொள்கிறார்கள். (2) கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணுகிறார்கள்.*** *இங்கே முதல் சொற்றொடரில் அப்போஸ்தலன் வலிமையான வார்த்தையைப் பயன்படுத்தினார். நேரடி மொழிபெயர்ப்பில் இவ்வாசகம், "விசேஷமாக மாம்சத்தை கெட்டுப் போகச் செய்ய ஏதுவாக ஆசையுள்ளவர்களாக நடந்தவர்கள்" என்று கூறப்பட்டது. பேதுருவின் விவாதம் சோதோமைப்பற்றியதாக இருந்தது. யூதாவை போலல்லாது, பேதுரு நேரடியாக பட்டணத்தின் ஓரினச் சேர்க்கையைக் குறிப்பிடவில்லை, ஆனால் அவர் பயன்படுத்திய வார்த்தைகள் காமவிகார நடக்கையின் எல்லா அறிகுறிகளையும் கொண்டுள்ளன. இந்த வார்த்தைகள் கள்ளப் போதகர்களின் வாழ்வுமுறையை அப்போஸ்தலன் தாக்கியதின் துவக்கமாக இருந்தது.*

*எந்த "கர்த்தத்துவத்தை" கள்ளப் போதகர்கள் அசட்டை பண்ணுகிறார்கள் (பண்ணினர்) என்பது முற்றிலும் விளங்காததாயிருக்கிறது. கிரேக்க வார்த்தையான* (*kuriotēs*) *கர்த்தத்துவ அதிகாரத்தைக் குறிப்பிடுகிறது, ஒருவகையில் அது தேவனுடைய அதிகாரத்தை, அல்லது அவருடைய செய்தி*

யாளர்களான தூதர்களின் அதிகாரத்தைக் குறிப்பிடுவதாகவும் இருக்கலாம். பேதுரு ஏற்கனவே பாவஞ்செய்த தூதர்களைக் குறிப்பிட்டார் (2:4), மேலும் பின்வரும் வசனத்திலேயே மீண்டும் தூதர்களைப் பற்றிக் குறிப்பிடுவதால், கள்ளப் போதகர்கள் தூதர்களைக் குறித்தோ அல்லது தூதர்களின் அதிகாரத்தைக் குறித்தோ ஒரு குறிப்பிட்ட அபிப்ராயம் கொண்டிருக்கவில்லை, தேவதூதர்களை முக்கியப்படுத்தி மறையியல் ஞான கோட்பாட்டுக்காரர்களின் யூகத்தை அறிந்திருந்து, கள்ளப் போதகர்கள் மறையியல் ஞானத்தைப் பற்றி எண்ணங்கள் தூதர்களே அதிகாரம் பெற்றவர்கள் என்ற போதனையைப் பற்றிக் கொண்டிருந்தனர். பேதுரு கள்ளப் போதகர்களைக் குறிப்பிட்டு அவர்களுடைய இறுமாப்பும், மனவிருப்ப வழிகளையும் பற்றி பேசுவதால் (2:10, 18), ஒன்றேல் அவர்கள் கிறிஸ்துவின் அதிகாரத்தைப் புறந்தள்ளியிருக்க வேண்டும் அல்லது கிறிஸ்து தமது அதிகாரத்தைக் கொடுத்திருந்த தமது அப்போஸ்தலர்களின் அதிகாரத்தை புறந்தள்ளியிருக்க வேண்டும். கள்ளப் போதகர்கள் ஆவியால் ஏவப்பட்ட தேவனுடைய செய்தியாளர்களின் போதனைகளை வெறுத்தார்கள்.

## கள்ளப் போதகர்களின் குணாதிசயங்கள் (2:10-16)

**[10]இவர்கள் துணிகரக்காரர், அகங்காரிகள், மகத்துவங்களைத்
தூஷிக்க அஞ்சாதவர்கள். [11]அதிகபெலனையும் வல்லமையையுமுடைய தேவதூதர்கள் முதலாய்க் கர்த்தருக்கு முன்பாக அவர்களைத் தூஷணமாய்க் குற்றப்படுத்த மாட்டார்களே.
[12]இவர்களோ பிடிபட்டழிக்கப்படுவதற்கு உண்டான புத்தியற்ற மிருக ஜீவன்களைப் போலத் தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூஷித்து, தங்கள் கேட்டிலே கெட்டழிந்து, அநீதத்தின் பலனை அடைவார்கள்.
[13]இவர்கள் ஒரு நாள் வாழ்வை இன்பமென்றெண்ணி, கறைகளும் இலச்சைகளுமாயிருந்து; உங்களோடே விருந்துண்கையில் தங்கள் வஞ்சனைகளில் உல்லாசமாய் வாழ்கிறவர்கள்;
[14]விபச்சார மயக்கத்தால் நிறைந்தவைகளும், பாவத்தை விட்டோயாதவைகளுமாயிருக்கிற கண்களையுடையவர்கள்; உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடித்து பொருளாசைகளில் பழகின இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளைகள்.
[15]செம்மையான வழியை விட்டுத் தப்பிநடந்து, பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றிப் போனவர்கள்; அவன் அநீதத்தின் கூலியை விரும்பி,
[16]தன்னுடைய அக்கிரமத்தினிமித்தம் கடிந்து கொள்ளப்பட்டான்; பேசாத மிருகம் மனுஷர் பேச்சைப் பேசித் தீர்க்கதரிசியினுடைய மதிகேட்டைத் தடுத்தது.**

கள்ளப் போதகர்களின் மீது நியாயத்தீர்ப்பு நிச்சயமாக வரும் என்று தமது வாசகர்களுக்கு உறுதியளித்த பின்பு, அப்போஸ்தலன் அடுத்ததாக எல்லாவற்றிலும் மோசம் போக்கும் அவர்களுடைய குணாதிசயங்கள் மீது தாக்குதலைத் துவங்குகிறார். அவர்கள் போதித்தவைகளைக் குறித்து இன்னும் அதிகமாய்ச் சொல்லியிருந்தால் நலமாக இருந்திருக்கும் என்று நாம் விரும்புகிறோம். விழிப்புணர்வு கொண்ட மேற்கத்திய கலாச்சாரம்,

அவர்களது தனித்தன்மைகொலை செய்யப்படுவதை தவிர்த்து, தொடர்ந்து உண்மையான விஷயங்கள் மீது விவாதம் நடத்திக் கொள்ளவிரும்புகின்றனர். பூர்வ உலகத்தில் செய்தியும் அதைச் சொல்லுபவரும் மிக நெருக்கமான கோட்டில் பார்க்கப்பட்டனர்.

**வசனம் 10.** பேதுரு முதலாவதாக ஆணியடித்தாற்போல் சொல்லுகிற காரியம் கள்ளப் போதகர்கள் வேறொருவருக்குமில்லாத அதிகாரம் தங்களுக்கு மட்டுமே இருப்பது போல தங்களைப்பார்த்துக் கொண்டார்கள். அவர்கள் **துணிகரக்காரரும் அகங்காரிகளுமாயிருந்தனர்.** பாவத்தின் துவக்கம் என்பது போதிய அளவு சுய பெருமையைக் கொண்டதாக இருக்கிறது. அநேக காரியங்களுக்குள்ளே, தேவ பக்திக்கு தன்னுடைய சகோதரர்களிடமிருந்தும் சகோதரிகளிடமிருந்தும் கற்றுப் கொள்ள தாழ்மையே அவசியம். 2 பேதுருவில் சொல்லப்படுகிற கள்ளப் போதகர்கள் தங்களுடைய சுய "வெளிப்பாடு" தேவனிடத்திலிருந்து வந்ததாக அவைகளை மட்டும் சார்ந்திருக்க வில்லை, நன்கு வளர்ச்சிபெற்ற கிறிஸ்தவர்கள் அவர்களைச் சரியான பாதையில் நடத்தும் திராணி பெற்று, போதிக்கப்படுகிற திருமறை போதகங்களையும் ஞானிகளின் வாக்கையும் கூட அசட்டை பண்ணுகிறார்கள்.

அவர்களுடைய "துணிகரத்துக்கும்" சுய "அகங்காரத்துக்கும்" ஒரு உதாரணமாக, பேதுரு அவர்கள் மகத்துவங்களைத் தூஷிக்க அஞ்சாதவர்கள் என்று குறிப்பிட்டார். இந்தச் சொற்றொடர் மொழிபெயர்ப்பில் வேறுபடுகின்றன. NRSV எனும் ஆங்கில மொழிபெயர்ப்பில், "அவர்கள் மகத்துவங்களைத் தூஷிக்க பயப்படாதவர்கள்" என்று குறிப்பிடுகிறது. NIV எனும் மொழிபெயர்ப்பில், "இந்த மனுஷர்கள் விண்ணுலக ஜீவிகளைக் குறித்து புறம்பேச பயப்படாதவர்கள்" என்று சொல்லுகிறது. கிரேக்க பதத்தின் நேரடி மொழிபெயர்ப்பில், "மகத்துவங்களை அவர்கள் தூஷிக்கும்போது, அவர்கள் நடுங்குவதில்லை" என்று சொல்லப்படுகிறது. "மகத்துவங்கள்" என்பன யாவை? "மகத்துவம்" எனும் வார்த்தை *(doxa)* பன்மையில் அபூர்வமாகச் சொல்லப்படுகிறது. அது ஒரு வேளை, நிச்சயம ாயல்ல, விண்ணுலக ஜீவன்களைக் குறிப்பிடலாம். சிலகாரியங்களில் புகழ்வாய்ந்த மக்களுக்குப் பயன்படுத்தப்படும். 1 பேதுரு 1:11ல் அது மகிமையுள்ள காரியங்களுக்கு பன்மையில் குறிப்பிடப்படுகிறது. பேதுரு அநேகமாக கள்ளப் போதகர்கள் அப்போஸ்தலர்களின் அதிகாரத்தையும் சபையின் மூப்பர்களின் அதிகாரத்தையும் தூஷிக்கிறவர்களாயிருந்தனர் என்று சொல்லியிருக்கக் கூடும். "மகத்துவங்கள்" எனும் வார்த்தை தூதர்களைக் குறித்து அல்ல, ஒரு மதிப்புக்குரிய ஸ்தானத்தில் சபையின் முன்னோடிகளைக் (மூப்பர்களைக்) குறித்துப் பேசுகிறது என இந்த வசனப்பகுதி தர்க்கிக்கிறது. பவுல் சபை "அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டிருக்கிறது; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்" என்று சொன்னார் (எபேசியர் 2:20). பிரச்சனை என்னவெனில் கிறிஸ்து தாமே தமது வசனங்களை ஒப்புக் கொடுத்த மதிப்பிற்குரிய மூப்பர்களுக்கு கள்ளப் போதகர்கள் மதிப்புக் கொடாமல் போனார்கள். அடுத்த வசனத்தில் தூதர்களைக் குறித்துப் பேசுகிறது, ஆனால் வசனம் 10ல் அல்ல.

**வசனம் 11.** தேவ தூதர்கள் கூட குற்றஞ் சுமத்த தயங்குகிறபோது

*இந்தக் கள்ளப் போதகர்கள் தங்கள் சுய அதிகாரத்தை உண்மை யென எடுத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் சபையின் ஆவிக்குரிய தலைவர்களை தூஷணமாய்ப் பேசினார்கள், ஆனால்* ***அதிக பெலனையும் வல்லமையையுமுடைய தேவ தூதர்கள் முதலாய்க் கர்த்தருக்கு முன்பாக அவர்களைத் தூஷணமாய்க் குற்றப்படுத்த மாட்டார்கள்.*** *தர்க்கமானது கீழானவர்களிமிருந்து மேலானவர்களுக்குச் செல்கிறது.*[8] *தேவதூதர்களே தூஷணமாய்க் குற்றப்படுத்தினால் தங்கள் மீது குற்றஞ் சுமரும் என்று இருக்குமானால், கள்ளப்போதகர்கள் மீது இன்னும் எவ்வளவுக்கதிகமாய் குற்றஞ் சுமரும்? 2:4க்குப் பிறகு இங்குதான் முதல் முறையாக தூதர்கள் பற்றி குறிப்பிடப்படுகிறது. கள்ளப் போதகர்களின் அகந்தையை விவரிக்கும் பொருட்டு அவர்கள் அறிமுகப்படுத்திப்படுகின்றனர். அவர்கள் (கள்ளப்போதகர்கள்) அப்போஸ்தலரின் அதிகாரத்திற்கு எதிர்த்து நின்றவர்கள். அவர்களுக்கு 2:10ன் "மகத்துவத்தின்" பாங்கு தெரிந்திருக்கவில்லை.*

*"மேலான" என்பது ஒரு ஒப்பீட்டு வார்த்தை, ஆனாலும் பேதுரு தன்னுடைய வாசகர்கள் தேவ தூதர்களை யாருக்கு ஒப்பிடும்படி விரும்பினார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. தூதர்கள் "மகத்துவங்களைக் காட்டிலும்" "அதிக பெலனும் வல்லமையையுமுடையவர்கள்" தானா? அவர்கள் சபையின் தலைவர்களை (மூப்பர்களை) விட மேலானவர்களா, அல்லது கள்ளப் போதகர்களைக் காட்டிலும் மேலானவர்களா? தூதர்கள், கள்ளப் போதகர்களைக் காட்டிலும் மேலானவர்கள் என்று சொல்லுவது அவசியமில்லாதிருந்த போதிலும், பேதுரு அநேகமாக அதைத்தான் பொருள்படுத்தி சொல்லியிருக்கக் கூடும். சபைத்தலைவர்கள் மீது குற்றச் சாட்டுக்களை தூஷணமாய் அள்ளி வீசும் கள்ளப் போதகர்களின் பயனற்ற செயல்களை ஒப்பிடுவது குறைவாக மதிப்பீடுவதாக இருக்கிறது.*

*தேவ தூதர்கள் முதலாய் "கர்த்தருக்கு முன்பாக அவர்களைத் தூஷணமாய்க் குற்றப்படுத்த மாட்டார்களே" என்று யாரைக் குறிப்பிட்டு பேதுரு சொல்லியிருப்பார்? 2:10ல் சொல்லப்பட்ட "மகத்துவங்களை" அடையாளப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு, பிரதிப்பெயர்ச் சொல்லில் குறிப்பிடப்படும் "அவர்களை" என்பது வித்தியாசமானதாயிருக்கிறது.* NASB *மொழிபெயர்ப்பை நாம் பின்பற்றுவோமாகில், "மகத்துவங்கள்" என்பது தேவ தூதர்களை குறிப்பிடுமானால், "அவர்களை" என்பதன் முன்நிகழ்ச்சியான கள்ளப் போதகர்கள் என்பதையே குறிக்கும். இதன் பொருள் என்னவெனில், "கள்ளப் போதகர்கள் தேவ தூதர்களின் மகத்துவங்களை தூஷணமாய் பேச தயங்குவதில்லை, ஆகிலும் தேவ தூதர்கள் கள்ளப் போதகர்கள் மீது நியாயத்தீர்ப்பைக் கொண்டு வருவதில்லை." இருப்பினும், நாம் நம்புகிறபடி மகத்துவங்கள் என்பது சபைத் தலைவர்களாயிருந்தால், தூதர்கள் சபைத்தலைவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகளைக் கொண்டுவரமால் இருந்தாலும் "கள்ளப் போதகர்கள் சபைத் தலைவர்களை எதிர்க்கத்தயங்குவதில்லை" என்பது உண்மையாக இருக்கிறது.*

***வசனம் 12.*** *அப்போஸ்தலன் அடுத்ததாக யூதாவிலுள்ள வசனப்பகுதிகளைத்தவிர வேதாகமத்தில் வேறு எங்கும் காணப்படாத, கள்ளப் போதகர்களுக்கு எதிரான, கடினமான வசை மொழிகளைக்*

கட்டவிழ்த்துவிட்டார். அவருக்கும் மற்ற சபைத்தலைவர்களுக்கும் கள்ளப் போதகர்கள் என்ன செய்தார்கள் என்பதற்காக கண்டனம் பண்ணினரோ, அதையே பேதுருவும் செய்வதாகக் காணப்படுகிறது. அவர்களுக்கு எதிராகக் குற்றஞ்சுமத்தினார். இந்தக் கள்ளப் போதகர்கள், **புத்தியற்ற மிருகங்களைப் போலிருக்கின்றனர்** என்றார். அவர்கள் **பிடிபட்டழிக்கப்பட வேண்டியவர்கள்.** பேதுருவைப் பொறுத்தமட்டில் கள்ளப் போதகர்களின் உள்நோக்கம், அவர்கள் பரிந்துரைத்த நடத்தைகள், அவர்களுடைய போதனைகளின் சாராம்ஸம் யாவும் ஒன்றுக்கொன்று பிரிக்கப்பட இயலாதவை என்று சொன்னார். அவரது முழுமையான கணிப்பின்படி அவர்கள் என்னவாயிருந்தனர் என்பதும் அவர்களால் விளையும் காரியம் என்ன என்பதுமே. தலைக்கனமே, அவர்கள் விட்டுவிட்ட காரணம். அவர்கள் ஒரு வெறுக்கத்தக்க மிருகம் போன்றவர்கள். என்பதால் அவர்களைக் கையாள ஒரே வழி அவர்களை எதிர்கொள்ள வேண்டும் என்பது தான். நியாயப்படுத்துவதில் பிரயோஜனம் எதுவுமில்லை. அவர்கள் புத்தியற்ற மிருகங்களைப் போல் இருந்தனர், எனவே ஒரு வித பலாத்காரத்தை மட்டுமே புரிந்து கொள்ள முடிந்தவர்களாயிருந்தனர். அவர்களைக் குறித்த நுணுக்கமான காரியம் எதுவுமில்லை. அவர்கள் தங்களை மட்டுமே பிரியப்படுத்திக் கொள்ள சேவை செய்தனர்.

காலநேரம் வரும்போது ஒருவர் விசுவாசத்தில் இளமையாயிருப்பவர்களிடம் வேண்டுதலுடன் மன்றாடி அவர்களிடம் பதில் வேண்டி தேடுவார்கள். வளர்ச்சியடைந்த ஒரு சிலருடைய அதிக விசுவாசத்தினால் சிலர் “அக்கினியிலிருந்து இழுக்கப்பட்டு” இரட்சிக்கப்படுவார்கள் (யூதா 22). பேதுரு எதிர் கொண்ட போதகர்கள் தங்களுடைய முரட்டாட்டத்தில் மிகவும் கடினப்பட்டுப்போயிருந்தனர். அவர்கள் விசுவாசத்தின் புனிதமான கோரிக்கையை பரியாசம் பண்ணி, தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூஷித்தார்கள். அவர்கள் தங்கள் அகந்தையினால் அவர்கள் காமவெறிகொண்ட வாழ்க்கைமுறையை பரிந்துரைத்து, கட்டுப்பாடற்ற முறையில் நடந்து கொண்டார்கள். காரணம் எதுவுமின்றி அவைகளை கைவிட்ட நிலையில், அவர்கள் தெரிந்து கொண்ட மைதானத்திலேயே அவர்களை எதிர்கொள்வது தவிர வேறு வழியில்லை. கடைசி நாளிலே கர்த்தர் மறுபடியும் வரும்பொழுது, “புத்தியற்ற மிருக ஜீவன்களைப் போல,” அல்லது “துஷ்ட மிருகத்தைப் போல,” (KJV) கெட்டழிவார்கள். அதேவேளையில் கள்ளப் போதகர்கள் அந்த ஜீவன்களைப்போல தங்கள் கேட்டிலே கெட்டழிந்து, அநீதத்தின் பலனை அடைவார்கள். அவர்கள் சபைகளில் முழு நாசத்தை ஏற்படுத்தியிருந்த நிலையில், அவர்களுடைய முடிவு நிச்சயமானதாக இருந்தது.

தங்கள் அநீதத்தின் பலனை அடைவார்கள் எனும் சொற்றொடர் பழங்கால எழுத்துப் பிரதிகளில் வித்தியாசமான வாசகத்தைக் கொண்டுள்ளது, அவை கிரேக்க புதிய ஏற்பாட்டு நகல்களில் நமக்குக்கிடைத்தவை. KJV மொழிபெயர்ப்பில் வாசகம் *komioumenoi* என்பதை தொடர்ந்து, “அநீதத்தின் பலனை அடைவார்கள்” என்று மொழிபெயர்த்துள்ளது. பெரும்பாலான வேத வல்லுனர்கள் *adikoumenoi* என்ற வாசகமே சரியெனக் காட்ட சிறப்பான ஆதாரம் இருப்பதாகக் குறிப்பிடுகின்றனர். பின்னதான இந்த வாசகத்தைப் பின்பற்றி,

NASB யில் கள்ளப் போதகர்கள் தவறானவைகளைச் செய்ததனிமித்தம் தவறுக்கான பலனை அடைவார்கள் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.[9] தவறுக்கான தண்டனையை அனுபவிப்பது தவறுக்கு கிடைக்கிற பலன் என்பது ஒரு ஆர்வமிக்க கருத்து. இதனால் பாவத்துடன் யாரும் தப்பிக் கொள்ள இயலாது, அது இம்மை வாழ்க்கையிலும் உண்மையானது.

மற்றவர்களின் செலவில் தங்களுக்கு சந்தோஷத்தைத் தேடுகிறவர்கள், தங்கள் வாழ்க்கையின் முதன்மைக் காரியமாக, நேர்மை, தனித்தன்மையில் உண்மை, மற்றும் கொள்கை என்பதெல்லாம் எந்த ஒரு அர்த்தத்தையும் கொடுப்பதில்லை, அவர்களின் முடிவு தங்களுக்கு கிடைத்த நல்ல நேரங்களை போக்கடிக்கிறார்கள். மிக அதிகமாய் விவாதிக்கப்பட்ட மோசேயின் பிரமாணத்திலிருந்து, "... உங்கள் பாவங்கள் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும் என்பதை நிச்சயமாய் நம்புங்கள்." என்று வாசிக்கப்படுகிறது (எண்ணாகமம் 32:23). இந்த வசனம், "பாவம் தனது சொந்த தண்டனையைக் கொண்டுள்ளது" என்று சொல்லுவது போல் உள்ளது- இது பேதுரு குறிப்பிட்ட வார்த்தையிலிருந்து வெகு தொலைவில் இல்லை, கடிவாளம் போடப்படாத களியாட்டுச் சந்தோஷம் குழப்பமும் அழிவும் நிறைந்த பாதைக்கு கொண்டு செல்கிறது. பாவம் தன்னில் தானே அழிவுள்ளது. ஒரு நடத்தை விளைவிக்கும் ஜீவன் அல்லது மரணத்தைப் பொறுத்து தேவன் நடத்தையை விமர்சிக்கிறார் அல்லது தடுக்கிறார். எதிர்மறையில் குறிப்பிட்டால், பாவம், என்பது கொடுங்கோன்மையுடன் கூடிய சர்வதிகார ரீதியில் ஒரு சலனமுள்ள தேவனிடத்திலிருந்து வருவதல்ல. தவறில் வாழ்பவர்கள் மழலையின் சிரிப்பில் சிற்றளவே மகிழ்வு காண்பவர்களும், நற்செய்கைகளில் அற்பதிருப்தி படுகிறவர்களாயுமிருக்கின்றனர். சந்தோஷத்தை அடையும் செயல் முறையில், தங்களுடைய வாழ்க்கையில் பரிதபிக்கப்படத்தக்கவர்களாக முற்றிலும் மாறிப்போகிறார்கள், இது அவர்களிலும் அவர்களோடு தொடர்புடைய அனைவரோடும் அப்படி ஆகிறது. அவர்கள் பாடுபடுவதில் "தவறு செய்வதற்குக் கூலியாக தவறை அனுபவித்தல்" என்பது சிறிதளவு ஆச்சரியமே.

***வசனம் 13.*** கள்ளப் போதகர்கள் தங்களுக்கு மாத்திரம் அழிவை வருவித்துக் கொள்வதில்லை, கிறிஸ்துவின் சரீரத்தையும் கெடுக்கக் கூடியவர்களாய் மாறுகிறார்கள். தேவனுடைய மீட்கப்பட்ட ஜனங்களோடு கலந்திருப்பதால், இவர்கள் ஒருநாள் வாழ்வை இன்பமென்றெண்ணி, கறைகளும் இலச்சைகளுமாயிருந்து; உங்களோடே விருந்துண்கையில் தங்கள் வஞ்சனைகளில் உல்லாசமாய் வாழ்கிறார்கள்; அப்போஸ்தலன் இங்கே தனது வாசகர்களை கள்ளப் போதகர்களை எதிர்த்து நிற்கத் தவறினதற்காகக் கடிந்து கொண்டு, அவர்களை விட்டு விலகவும் அறிவுறுத்துகிறார். REB எனும் ஆங்கில மறுதிருத்த மொழிபெயர்ப்பு வண்ணம் மிகுந்ததும் உண்மையுள்ளதுமாக கிரேக்க மூலப்பாஷையில்: "பகல் வெளிச்சத்தில் களியாட்டம் கொள்வது என்பது அவர்களின் சிற்றின்ப எண்ணம்; உங்களுடன் உண்ண அமரும் போது வஞ்சனைகளில் களியாட்டம் கொள்வதால் உங்கள் தோழமையின் மாடுபடுத்துகிறவர்களாயிருக்கிறார்கள்" என்றுள்ளது.

பாவம் என்பது இரவின் இருட்டிலே நடப்பிக்கப்பட்டாலும் பகலின் வெளிச்சத்திலே நடப்பிக்கப்பட்டாலும், குறைவான அழிவைக் கொடுப்பதில்லை, ஆனால் பகலிலே நடப்பிக்கப்படும் பாவம்

*இலச்சையடையச் செய்கிறது, உணர்வற்ற நிலைக்குத் தள்ளுகிறது. மதுபான வெறியும் அத்துடன் கூடிய பாவச்செயல்களும் இருளின் பிள்ளைகளாக்குகிறது (காண்க 1 தெசலோனிக்கேயர் 5:7). இதிலே எதிர்மறை மற்றும் நேர்மறை ஆகிய இரண்டுமே உள்ளது. ஒருவன் பாவத்தில் மூழ்கிக் கிடக்கும் ஒருவன் வெட்கத்தை உணரும்போது, அவனை சிலுவைச் செய்தியுடன் அணுகமுடியும்* ***பகலில் களியாட்டாம் கொள்வதை இன்பமென்று எண்ணுகிறவர்கள்*** *தங்கள் வெட்கத்தை விட்டுவிட்டார்கள். ஒருவர் தனது உள்ளுணர்வைச் சார்ந்திருந்து, பாவத்தை மூடும் செயல் நம்பிக்கையூட்டும் கலங்கரை விளக்காகவுமிருக்கலாம் அல்லது மாய்மாலத்தின் சின்னமாகவும் இருக்கலாம். ஒரு நபர் தனது பாவத்துக்காக வெட்கப்பட்டு அதை மூடி மறைத்து தன்னை மாற்றிக் கொள்ள விரும்பலாம். அப்படிப்பட்டவனுக்கு நம்பிக்கையுண்டு. மற்றொருவன் தான் இருக்க வேண்டிய முறைப்படி வாழவிரும்பாமல் தன் பாவத்தை மறைத்து புகழப்பட அவன் விரும்புகிறான். அவனுக்கு மாய்மாலம் தான் அவனது கூலியாக இருக்கிறது.*

NASB *உட்பட, அநேக மொழிபெயர்ப்புகள், வசனப்பகுதியின் இரண்டாவது வேறுபாட்டுக்கு கவனத்தைத் திருப்புகிறது. சில மொழிபெயர்ப்புகளில் "வஞ்சனைகள்"* (*apatais*) *என்பதற்குப் பதிலாக "அன்பின் விருந்து" என்று* (*agapais*) *சொல்லப்படுகிறது. பின் சொல்லப்பட்டது யூதா 12ல் தெளிவாகக் காணுகிறது. இந்த வசனத்தின்படி "வஞ்சனைகள்" என்றே எடுத்துக் கொண்டாலும், பேதுரு அநேகமாக பகிர்ந்து உண்ணும் விருந்தை மனதிற்கொண்டு எழுதியிருக்கலாம். உலகளாவிய ரீதியில், ஐக்கியத்தைக் கொண்டாடுவது என்பது மக்கள் ஒன்றுகூடி உண்பதாகும். துரதிஷ்டவசமாக அப்படிப்பட்ட ஐக்கிய விருந்து சீர்குலைக்கப்பட்டு தரமற்றதாக மாற்றப்படக் கூடும். ஒரு வகையான தரக் குறைவைக் குறித்து 1 கொரிந்தியர் 11:20, 21ல் பவுல் குறிப்பிடுகிறார். பேதுரு வேறொரு வகையான தரக் குறைவுபடுத்துவதை எழுதுகிறார். கர்த்தரை மனசாட்சியிலே கனப்படுத்த விழைந்து பங்கு பெறும் அதே விருந்தில் துன்மார்க்கமும், சிற்றின்ப வேட்கையிலும் திளைத்திருக்கிறவர்கள் வரவேற்கப்படுவார்களாகில், அந்த விருந்தில் பங்கு பெற்றுக் கொண்டுள்ள அனைவரும் ஒரே தூரிகையால் வண்ணம் தீட்டப்பட்டவர்களாகத்தான் இருப்பார்கள். எதிர்ப்புக் குரல் கொடுக்காமல் பாவத்தை ஏற்றுக் கொள்வதுதென்பது அதை அங்கீகரிப்பதாகும். பாவத்தை ஏற்று சபையிலே சகித்துக் கொண்டிருப்பது, கிறிஸ்துவைக் கொண்டிருப்பவர்கள் உலகத்திற்கு எவ்வித பரிசுத்தத்தையும் தெரிவு செய்து கொண்டிருப்பதைக் காட்ட இயலாது. கிறிஸ்துவுக்கு புறம்பே இருப்பவர்கள் எள்ளி நகையாடுவார்கள்; சரீரத்திற்குள்ளாக அங்கம் வகித்திருப்பவர்கள் விசுவாசத்தில் பெலவீனமாயிருப்பார்களாகில், அவர்கள் குறை கூறித்திரிகிறவர்களாகவும் பாவம் கொண்டு வருகிற மரணத்தைக் குறித்து மாய்மாலம் பண்ணுகிறவர்களாயும் மாறிப்போவார்கள்.*

***வசனம் 14.*** *இந்த வசனப் பகுதியில் "கள்ளப்போதகர்கள்" என்று பேதுரு விவரித்தவர்களை அழைக்கிறார், இருப்பினும் அவர்களுடைய நடத்தைகளும் அவர்களுடைய குணாதிசயங்களுமே அவருடைய நோக்கமாயிருந்தது, அவர்களுடைய போதனைகளல்ல, அவர்கள் மிகத் தாராளமாக ஒழுக்கங்கெட்ட நிலையிலிருந்தார்கள், விபச்சார ம*

யக்கத்தால் நிறைந்தவர்களும், பாவத்தை விட்டோயாதவர்களுமாயிருக்கிற கண்களையுடையவர்கள். அப்போஸ்தலன் இங்கே "விபச்சாரம்" (*moicheia*), எனும் வார்த்தைக்கு சாதாரண வார்த்தையைப் பயன்படுத்தவில்லை, அதுதான் ஒரு வேளை அர்த்தமாயிருக்கலாம். நேரடிப் பொருளில் அவர் அவர்களுடைய கண்கள் "ஒரு விபச்சாரியால் நிறைந்திருக்கிறது" (*moichalis*) என்று சொல்லுகிறார்.

பேதுரு பயன்படுத்தின இந்த வார்த்தையை வினயமாக எடுத்துக் கொண்டு பார்ப்போமாகில், இந்தப் போதகர்கள் பெண்களை பாலின மோகத்திற்குரிய பொருளாக எப்படி பார்ப்பது என்பதை மட்டுமே அறிந்திருந்தார்கள் என்று அவர் சொன்னார். இன்றைக்கும் சிலர் பரத்தையர் பற்றிய இலக்கியங்களை உருவாக்குவதும் அல்லது பிரியப்படுவதுமாயிருக்கிறார்கள், அவர்கள் ஒரு ஸ்திரீயை தங்களுடைய உறவை அர்த்தமுள்ளதாக பகிர்ந்து கொள்ளத்தக்கவள் என்ற கோணத்தில் பார்ப்பதில்லை. மாறாக, அவளைப் பயன்படுத்திவிட்டு தூக்கயெறியப்பட வேண்டிய ஒரு பொருளாக மட்டும் பார்க்கப்படுகிறாள். கள்ளப் போதகர்களைப் போல் நடந்து கொள்கிறவர்கள் ஒரு பெண்ணின் உறவை நேசிக்க, கொடுக்க, பெற திராணியற்ற நிலைக்கு வருகிறார்கள். அவர்கள் "பாவத்தை விட்டோயாதவர்களுமாயிருக்கிறார்கள்."

பாவம் சில இடங்களில் பயன்படுத்தினாலொழிய தானாக சோதனையாகிவிடாது. பெரும்பாலானவர்கள், ஆண்களும் பெண்களும், தங்களுடைய பாலுறவு மனதிருப்தியளிப்பதாக சுத்தமும் எளிமையானதுமான பயன்பாடு என்பதை தங்களுக்குள்ளாகவே காண்பார்கள். கள்ளப்போதகர்கள் இதினாலே உறுதியில்லாத ஆத்துமாக்களைப் பிடிக்கிறார்கள் என்பது சற்று ஆச்சரியமளிக்கிறது. தந்திரமாய்ப்பிடித்து (*deleazō*) என்ற வார்த்தை இங்கும் 2:18லும் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. யாக்கோபு 1:14லும் இழுக்கப்பட்டு, சிக்குண்டு என்று புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் "கண்ணியிலகப்படுத்துதல்" என்பதாகும். ஒரு மீனவன் தனது கொள்ளை பொருளை வசப்படுத்துவது போல, கள்ளப் போதகர்கள் ஆவிக்குரிய வளர்ச்சியற்றவர்களை வசப்படுத்துகிறார்கள். குறிப்பிட்ட வேளை வரும் போது தந்திரமாய் பிடிக்கப்பட்டவர்கள் வாழ்க்கையிலே சிக்கி தப்பித்துக்கொள்ள இயலாத விருப்பமில்லாத நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். ஒழுங்கீனங்களை சுலபமாய் சகித்துக்கொள்ள பழகுவது "அரிபிளவையைப் போல படரச் செய்யும்" (2 தீமோத்தேயு 2:17), அது சபையில் கிறிஸ்தவர்கள் கண்சிமிட்டி தங்கள் தலையை துலுக்கி பிரச்சனையை கண்டு கொள்ளாமல் போகும் அளவுக்குப் படரும். பாலுணர்வு ஒழுக்கக் கேடுகளுக்கும் அதினால் வரும் பாவங்களுக்கும் ஒரு மாற்றுச் செயலாக கிறிஸ்துவுக்கு ஒப்பான வாழ்க்கை விழியை உலகத்துக்கு முன் வைப்பதற்குப் பதிலாக சபை ஒரு அழிப்பானால் (ரப்பரால்) செய்யப்பட்ட முத்திரையிடு பொருளாக மாறிவிடக் கூடும் அது தவறானதை சட்டரீதியானதாக்கிவிடக் கூடும்.

கள்ளப் போதகர்களின் சுய தேவைக்கென செயல்படுவது பிற வழிகளில் தெளிவாகத் தெரிகிறது. அவர்கள் பொருளாசையால் பழகின இருதயத்தையுடையவர்கள். ஜோசிபஸ் எடைகளும் அளவைகளும் காயீனின் கண்டுபிடிப்பு என்று ஒப்பிட்டார் அவைகளால் அவனது சகாக்கள் மத்தியில்

அவன் பொருளாசையால் தூண்டப்பட்டான்[10] கிறிஸ்துவின் வழிக்கு வெகு தொலைவில், தங்கள் பொருளாசையால், கள்ளப் போதகர்கள் சாபத்தின் பிள்ளைகளாயினர். பாலுணர்வும் பணமும், புராதன உலகில் மற்றும் நவீன உலகிலும்கூட சுயநலத்துக்கும் தவறான பயன்பாட்டுக்கும் பின்னாலிருந்து முடுக்கிவிடுகிற சக்திகளாக இருந்தது போல் தோன்றுகிறது. "ஜிம்னாசியம்" எனப்படும் "உடற்பயிற்சிக் கூடம்" எனும் வார்த்தை அதன் ஆணிவேரை கிரேக்க வார்த்தையான (gumnazō). "பயிற்சிவிக்கப்படுதல்" என்பதிலிருந்து பெற்றது. கள்ளப் போதகர்கள் தங்களுக்குத் தாங்களே பயிற்றுவித்துக் கொண்டனர்; அவர்கள் முழுமையாய்த்தங்களுக்குத் திகட்டிப் போகும் அளவுக்கு தங்கள் ஆசைகளை நிறைவேற்றிக் கொண்டனர் பணம் அதற்கு ஏதுவானதாய் இருந்தது.

**வசனம் 15. செம்மையான வழியை விட்டுத் தப்பி நடந்து** என்று பேதுரு குறிப்பிடும் போது, கள்ளப் போதகர்கள் கிறிஸ்தவப் பயணமாகிய பாத்திரமான வழியை விட்டுப் போய் தங்கள் உள் நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டனர் என்கிறார். இமெனேயையும் அலெக்ஸாந்தரையும் போல, தங்கள் விசுவாசக் கப்பலை கவிழ்த்து போட்டிருந்தார்கள் (1 தீமோத்தேயு 1:19, 20). அன்பின் மிகுதியால் கிறிஸ்துவை அனைத்துக்கொள்வதும், ஞானஸ்நானத்திலே அவரைத் தரித்துக் கொள்வதும், தன்னை மீட்கப்பட்டவர்களின் கூட்டத்தில் ஒருவராக எண்ணிக் கொள்வதும் ஒருபோதும் போதுமானதாயிருக்கவில்லை, விடாமுயற்சி வாழ்க்கைக்கு வழிநடத்துகிறது. இந்த கள்ளப் போதகர்கள் பொருளாசையாகிய வஞ்சனையை அனுமதித்ததால் அது வசனத்தை நெருக்கிப் போட்டது; அவர்கள் கனியற்றும் போயிருந்தனர் (காண்க மத்தேயு 13:22). நேரடி அர்த்தத்தில் கிரேக்கம், அவர்கள் "நேர்வழியை" விட்டு விட்டார்கள் என்கிறது. ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாய் இருக்கிறது என்று இயேசு சொன்னார் (மத்தேயு 7:14). கள்ளப்போதகர்கள் விசாலமான வாசலைத் தெரிந்து கொண்டனர். பொருளாசையினால் பீடிக்கப்பட்ட அவர்கள், **பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றிப் போனார்கள்.** அது ஒரு நன்கு பயன்படுத்தப்பட்ட பாதை.

பிலேயாமின் கதை எண்ணாகமம் 22ல் தொடங்குகிறது. மோவாபின் ராஜாவாகிய பாலாக், திரளான இஸ்ரவேலரின் ஜனக்கூட்டம் தனது வாசலில் பாளையமிருப்பது கண்டு பயந்தான். எனவே தீர்க்கதரிசி பிலேயாமிடத்தில் ஆள் அனுப்பி அவன் வந்து இஸ்ரவேலரை சபிக்கும்படி வேண்டினான். தேவனுடைய ஆசீர்வாதமின்றி தான் எதுவும் செய்யக் கூடாது என்று பிலேயாம் பதிலளித்தான். தேவன் அவனிடம் தாம் இஸ்ரவேலை ஆசீர்வதித்திருப்பதாகச் சொன்னார்; பிலேயாம் போகக்கூடாது என்று பணித்தார். விஷயம் அத்துடன் முடிந்து விடும் என்று தோன்றியது, ஆனால் பாலாக் சூழ்நிலையை வித்தியாசமாகக் கணித்தான். ஜனங்களை சலனமடையப் பண்ணுவது எது என்று அவன் அறிந்திருந்தான்: பணமும் அதிகாரமும். பிலேயாம் இன்னும் அதிகமாய் எதிர்பார்த்தான். எனவே பாலாக் வேறே நபர்களை அனுப்பி, முன்பு அனுப்பப்பட்டவர்களிலும் அதிக அதிகாரம் மிக்கவர்களையும், இன்னும் அதிகப் பணமும் கொடுப்பதாக வாக்குறுதியுடன் அனுப்பினான். தீர்க்கதரிசி பதிலளித்து, "நான் ஏற்கனவே

என்பதிலைச் சொன்னேன். தேவன் என்னைப் போகவேண்டாமென்று சொல்லியிருக்கிறார்'' என்று சொல்லியிருக்க வேண்டும். மாறாக, அவன் மனம் ஊசாலாடியது. பிலேயாம் சம்மதித்தான். பணம் பார்வைக்கு அழகாயிருந்தது. தேவனை அவன் சம்மதிக்க வைக்கக் கூடும். மீண்டும் ஒரு வேண்டுகோளோடு அவரிடத்தில் கேட்டான். தேவன் சொன்னார், “அவர்களோடே கூடப் போ.” பேதுரு குறிப்பிட்ட கள்ளப் போதகர்களைப் போலவே பிலேயாம் பொருளாசையில் பிடிக்கப்பட்டான். பக்தியை உலகப் ஆதாயத்துக்காக பயன்படுத்துவோருக்கு பிலேயாம் ஒரு மூல முன்மாதிரியானவன்.

மற்றொரு வகையில் பிலேயாம் கள்ளப் போதகர்களுக்கு சரியான முன்மாதிரியாக நடந்தான். பிலேயாம் இஸ்ரவேலரை சபித்ததில் தோல்வி கண்டான், அவனால் சபிக்க இயலவில்லை, ஏனெனில் தேவன் அவர்களை ஆசீர்வதித்திருந்தார். இருந்தும், பிலேயாம் முழுமையான தோல்வியடைந்துவிடவில்லை. அவன் பாலாக்குக்கு அறிவுரை சொன்னான். பாலாக் இஸ்ரவேலரை மோவாபின் வழியில் விக்கிரகாராதனைக்கு இழுத்திருப்பானேயாகில், தேவன் அவர்களிடத்தில் கோபங்கொண்டிருப்பார். பாலாக் அவர்களை இணங்கச் செய்யக் கூடும். பாலாக் பிலேயாமின் அறிவுரையைப் பின் பற்றினான், அதன் விளைவாக இஸ்வேலர் பேயோரிலிருந்து பாகால் வசம் பாவத்தில் விழுந்தனர். அநேகர் கொல்லப்பட்டனர் (எண்ணாகமம் 25:1-9). பின்னர், யுத்தத்தில் ஸ்திரீகள் பிடிபட்டனர், இஸ்ரவேலர்கள் யுத்தத்தில் சாபத்தீடானவர்களானார்கள், மோசே ஆட்சேபித்து, “பேயோரின் சங்கதியிலே, பிலேயாமின் ஆலோசனையினால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணக் காரணமாயிருந்தவர்கள் இவர்கள் தானே; அதினால் கர்த்தரின் சபையிலே வாதையும் நேரிட்டதே” என்றார் (எண்ணாகமம் 31:16). பிலேயாம் இஸ்ரவேலர்களை பாவம் பண்ணச் செய்து சிற்றின்ப ஒழுங்கீனத்தை நடப்பித்தான். அவன் பொருளாசைக்கும் காம வேட்கைக்குமான பாவத்தைச் செய்வதற்கு ஒரு அடையாளமானான், இரண்டுமே பேதுரு எதிர் கொண்ட கள்ளப் போதகர்களிடம் இருந்தது.

பிலேயாம் ஒரு கவர்ச்சிகரமான பாத்திரம். அவன் அடிக்கடி புதிய ஏற்பாட்டு காலத்திலும் கூட யூதர்களின் விவாதங்களில் அதிகமாய் இடம் பெறுபவனாயிருந்தான். பிலேயாம் ஒரு யூதனல்ல; எகிப்திலிருந்து வரவழைத்து அவர்களோடு உடன்படிக்கையை தேவன் செய்தவர்களில் ஒருவனுமல்ல, இருந்தும், பிலேயாம் தேவனைத் தொழுது கொண்டவனும் அவரை யேகோவா (யாவே) என்று அழைக்கிறவனுமாயிருந்தான், இஸ்ரவேலருக்கு முன்பாக உடன்படிக்கையின் நாமமாக இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்ட பெயர் அது. இப்படி இஸ்வேலர்களையல்லாமல் உண்மையான தேவனை எத்தனை பேர் பிலேயாமைப் போல் தொழுது கொண்டுள்ளனர் என்பது ஒருவரை ஆச்சரியப்பட வைக்கக் கூடும்.

முடிவிலே, பிலேயாம் தேவனுடைய தீர்க்கதரிசியாக அல்ல, ஆனால் மிக உயர்வான கிரயத்துக்கு விலை போனவனாக நன்கு அறியப்பட்டான். ஃபீலோ எனும் முதல் நூற்றாண்டு யூதன் ஒருவர் எகிப்திலிருந்த அலெக்ஸாந்திரியா பட்டணத்தில் வாழ்ந்தார், தீர்க்கதரிசியின் வாயைக் கொண்டே கீழ்வரும் வார்த்தைகளாலே பிலேயாமின் மதியீனத்தை விளக்கப்படுத்துகிறார்,

*தேவன் மனுஷரைப் போல தவறாகப் பேசுபவரல்ல, அல்லது மனுஷகுமாரர்களைப் போல தனது நோக்கத்தை மாற்றிக் கொள்பவருமல்ல. ஒருமுறை அவர் பேசினால், அந்த வார்த்தையில் அவர் உறுதியாக நிற்பவரல்லவா? அவர் ஒன்றுஞ்சொல்லாமல் எதுவும் முழுமை பெற்று நிறைவாவதில்லை, அவருடைய வார்த்தை அவருடைய செயலாகவுமிருக்கிறது. நான் உண்மையில், இந்த தேசத்தை ஆசீர்வதிக்கவே அருகில் கொண்டு வந்தேன், சபிப்பதற்கல்ல.*[11]

*பெர்கமுவிலிருந்த சபைக்கு இயேசு சொன்னதாவது,*

*ஆகிலும் சில காரியங்களைக் குறித்து உன்பேரில் எனக்குக் குறையுண்டு; விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம் பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரர் முன்பாகப் போடும்படி பாலாக் என்பனுக்குப் போதனைசெய்த பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னுடத்திலுண்டு (வெளிப்படுத்தின விசேஷம் 2:14)*

***வசனம் 16.*** *பேதுரு, 2:12ல் கள்ளப் போதகர்களை "புத்தியற்ற மிருக ஜீவன்களுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்" என்று ஒப்பீட்டுச் சொன்னார். இப்பொழுது அவர் குறைந்த பட்சம் ஒரு புத்தியற்ற மிருகம், பிலேயாமின்* ***கழுதை,*** *பிலேயாமைக் காட்டிலும் அவனுடைய ஆவிக்குரிய சந்ததியைக் காட்டிலும் அதிக புத்திசாலியாயிருந்தது. பிலேயாமின் கழுதை பேசின சம்பவம் மிக அதிகமாக அடிக்கடிப் பேசப்படுகிற திருமறைக் கதையாகும். வாழையடி வாழையாக பிள்ளைகள் ஞாயிற்றுக்கிழமை வகுப்புகளில் கற்றுக் கொள்ளுகிறார்கள். பேதுருவைப் பொறுத்தமட்டில் பேசின அந்தக் கழுதை தங்களுடைய காம விகார நடக்கைக்கும் பொருளாதார இலாபத்துக்கும் செவிசாய்த்து தேவனுக்கு புறமுதுகு காட்டுகிற* **மதிகேடான ஜனங்களை** *அடையாளப்படுத்துகிறது.*

*பேசுகிற கழுதை அறிவாளிகளாய்க் கருதப்படுகிற மேற்கத்திய உலகிற்கு ஒரு பிரச்சனையை முன் வைக்கிறது. புதிய ஏற்பாட்டு ஜனங்களுக்கு, அது வாழ்வின் பாரம்பரிய செய்தித் தொகுதி. பேசுகிற கழுதையைக் காட்டிலும் ஆச்சரியப்படத்தக்க கதைகளைக் கண்டு பிடிப்பது புராதனக் காலங்களில் கடினமானவைகளல்ல. ஜோசிபஸ் போன்ற உலகியலுக்கேற்ற தொடர்புடைய கிரேக்கம் - பேசும் யூதர்கள் வரவிருந்த எருசலேமின் அழிவு குறித்து ஒரு ஆசாரியன் ஒரு கடாரிக் கன்றைப் பலியிடக் கொண்டு வந்த போது, ஜனங்கள் மத்தியில் ஒரு ஆட்டுக் குட்டியை ஈன்றது என்று சொல்லமுடிந்தது*[12] *ஒரு வரலாற்று ஆசாரியனாக ஒரு கதையை அப்படியே எடுத்துக் கொண்டார்.*

## கேட்டுக்கு அடிமையாயிருந்தும் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணுதல் *(2:17-22)*

***[17]இவர்கள் தண்ணீரில்லாத கிணறுகளும், சுழல் காற்றினால் அடியுண்டோடுகிற மேகங்களுமாயிருக்கிறார்கள்; என்றென்றைக்குமுள்ள காரிருளே இவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. [18]வஞ்சகமாய்***

***நடக்கிறவர்களிடத்திலிருந்து அரிதாய் தப்பினவர்களிடத்தில் இவர்கள் அகந்தையான வீண்வார்த்தைகளைப் பேசி, மாம்ச இச்சைகளினாலும் காம விகாரங்களினாலும் அவர்களைத் தந்திரமாய்ப் பிடிக்கிறார்கள். [19]தாங்களே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும், அவர்களுக்குச் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணுகிறார்கள்; எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கிறானே. [20]கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக் கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும்.***

***[21]அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். [22]நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது.***

*கள்ளப் போதகர்கள் மீதான தனது தாக்குதலை அப்போஸ்தலன் உணர்ச்சித் துடிப்புடன் புதுப்பிக்கிறார். கிறிஸ்துவினிடத்தில் புதிதாய் மனமாற்றப்பட்டவர்களிடத்தில் அவர்கள் ஏற்படுத்தப் போகும் விளைவைப்பற்றி அவர் அக்கறையுள்ளவராயிருந்தார். கள்ளப் போதகர்களால் ஊசலாடும் நிலைக்குத் தள்ளப்படுவார்களானால், அந்தப் புதிய கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டதற்கு முன்பு இருந்த நிலையைக் காட்டிலும் தங்களுடைய ஆவிக்குரிய நிலைமையில் மிகவும் மோசமான நிலையைக் கண்டுணருவார்கள். இந்த வசனங்களில் பேதுரு சில உள்நோக்கிக் காணும் உணர்வை ஏற்படுத்தி கள்ளப் போதகர்களைக் குறித்த செய்தியைக் காணச் சொன்னார். சுயாதீனமே அவர்களின் மையக் கருத்து - ஒழுக்கக்கட்டுப்பாடுகளிலிருந்து சுயாதீனம், நியாயப்பிரமாணத்திலிருந்து சுயாதீனம். இதிலே சொல்லப்படுகிற சுயாதீனம் என்ற பெயரில், அவர்கள் தங்களை கேட்டுக்கு அடிமைகளாக்கிக் கொண்டிருந்தனர் என்பது ஒரு வஞ்சப் புகழ்ச்சி அணியில் சொல்லப்படுகிறது. கிறிஸ்துவினிடத்தில் ஒரு போதும் இல்லாத அளவுக்கு பாவத்தின் அடிமைத்தனம் இம்மியளவும் குறையாத ஆதிக்கத்தைக் கொண்டிருக்கும்.*

***வசனம் 17.*** *இந்த வசனம் கானானிலும் கிழக்கத்திய தேசங்களுக்கு அருகிலும் உண்டாயிருந்த தண்ணீர் பற்றாக் குறையை மிகப்பெரும் சக்தியாக எடுத்துக் கொண்டு பேசுகிறது. தண்ணீர் உற்றுகள் அடிக்கடி திருமறையில் பேசப்படுகிறது. எருசலேமின் மதிற்சுவர்களுக்குப் புறம்பே கித்ரோன் பள்ளத்தாக்கில் கீகோன் ஊற்றண்டையில் சாலொமோன் இஸ்ரவேலின் மீது ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டார் (1 இராஜாக்கள் 1:33-35). பின்பு, எசேக்கியா சாலகத்தையும் உண்டாக்கி தண்ணீரை நகரத்திற்குள் கொண்டுவந்தான். அது சீலோவாம் குளமானது (2 இராஜாக்கள் 20:20; 2 நாளாகமம் 32:30). மழைக்காலத்தில் ஒரு ஊற்றுத் தண்ணீர் கரைபுரண்டு ஓடும், ஆனால் வறட்சி காலத்தில் அதே ஊற்று ஒன்றுக்கும் பிரயோஜனமற்றது என்பது போல் காட்சியளிக்கும்.* ***தண்ணீரில்லாத கிணறுகளும்*** *(ஊற்றுகளும்),*

*சுழல் காற்றினால் அடியுண்டோடுகிற மேகங்களும் போல,* கள்ளப்போதகர்கள் வாக்குறுதிகளை வாரிவிடுவார்கள் ஆனால் எதையும் வழங்கமாட்டார்கள்.

"காற்றினால் அடியுண்டோடுகிற மேகம்" என்று பேதுரு குறிப்பிட்டபோது, அவர் உருவக மொழியில் மேலோட்டமாக மட்டுமே சொன்னார். கள்ளப் போதகர்கள் மேற்குத்திசையிலிருந்து அடிக்கிற கூடுகிற கருமேகத்தைப் போன்றிருந்தார்கள், அது மழை வருவதை உறுதிப்படுத்தும், ஆகிலும் அந்த நாளின் உஷ்ணவேளையில் காணமற்போகும். இரண்டு உதாரணங்களுமே பொய்யான தோற்றத்தைக் கொடுத்து முதலில் மனதில் இடம் பிடிக்கும் என்பதை விளக்கப்படுத்துகிறது. கள்ளப் போதகர்கள் அதிரடியாக மனதைத் தொடும் செயலைச் செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை; அவர்களிடத்தில் தந்திரமான வார்த்தைகளும் வெற்றிகொள்ளும் வழிகளும் உண்டு. ஒரு நயவஞ்சகப் பேச்சின் மிருதுவான வார்த்தைகளால் கிறிஸ்தவன் வீழ்த்தப்படும் வாய்ப்பு உண்டு. கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் நல்ல ஜனங்களாக இருக்க கற்றுக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில், அவர்கள் உறுதியாய் நம்புகிறார்கள், மற்றும் நம்பப்படவும் விரும்புகிறார்கள்.

தேவனுடைய ராஜ்யத்தின் மகத்தான பயன்பாடுகளில் ஒன்று அது சமாதான - அன்புடன் கூடிய சமுதாயமாக, சந்தேகிக்கிற அனைத்து ஜனங்களுக்கும் அக்கறையுடன் இதன் பலனைப் கொடுப்பதாகும். பேதுரு தனது வாசகர்கள் ராஜ்யத்தினிமித்தம் எச்சரிக்கப்பட்டு, காலம் வரும்போது ஒருவர் தனது புருவத்தை உயர்த்தி கடினமான கேள்விகளை கேட்கவேண்டும். யோவான், "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத் தீர்க்க தரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" என்றார் (1 யோவான் 4:1). பவுல் எச்சரித்து, "உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்" என்று சொன்னார் (நடபடிகள் 20:30). பாவஞ்செய்த தூதர்கள் அந்தகார சங்கிலிகளினாலே கட்டப்பட்டு நியாயத்தீர்ப்பு நாள் வரைக்கும் நரகத்திலே தள்ளி வைக்கப்பட்டனர் (2:4). முடிவில், கள்ளப்போதகர்களுக்கு **காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது**, ஆகிலும் இதற்கிடையில் நூதனமான செய்திகளோடு வருபவர்கள் மீது விசுவாசிகள் நியாயத்தீர்ப்பை செலுத்த வேண்டியவர்கள். நியாயத்தீர்ப்பை முதலாவதாகவே கேட்பதின் அடிப்படையில் கொடுப்பவர்களாக இருக்கக் கூடாது. மழைகாலத்து ஊற்றைப் போலவும் அல்லது காற்றினால் கலைந்தோடுகிற மேகம் போலவும், உறுதியான நம்பிக்கையளிப்பதுபோல் தோன்றுகிற எதுவும் ஒத்துப் போகச் செய்து பயங்கரமான அழிவைக் கொண்டு வருகிறதாக மாறக் கூடும்.

**வசனம் 18.** ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் பேச்சாளர் சபைக்கு ஒரு பெரிய ஆசீர்வாதமாயிருக்கலாம், ஆனால் கள்ளப்போதகர்களும் நன்கு - நிர்வகிக்கப்பட்ட பேச்சுக்கலையினால் ஜனங்களைத் தன் வசப்படுத்துவார்கள். பயன்பாட்டோடு கூடிய பயன்பாட்டுத் தொகுப்புப் பேச்சு கட்டுப்பாடுகளை தூக்கியெறியச் செய்து, அநேக ஜனங்கள் அதினாலே மனம் தொடப்படுவார்கள். கள்ளப் போதகர்களான அவர்கள், **அகந்தையான வீண் வார்த்தைகளைப் பேசி,**

***தங்கள் மாம்ச இச்சைகளினாலே அவர்களைத் தந்திரமாய்ப் பிடிக்கிறார்கள்,*** "தந்திரமாய்பிடித்து" எனும் இதே வார்த்தை 2:14ல் பயன்படுத்தப்பட்டுள்ளது. கிரேக்க வார்த்தை கொக்கி இணைக்கப்பட்ட பொறியை அர்த்தப்படுத்துகிறது. முதல் பார்வையில்படுவது கவர்ந்திளுக்கக் கூடியதாயிருக்கலாம், அதுவே மரணக் கண்ணியாகலாம்.

பேதுருவின் வார்த்தை வண்ணம் மிகுந்தவையும் அபூர்வமானவைகளுமாகும். அவைகளில் சில புதிய ஏற்பாட்டின் பிற பகுதிகளில் இருக்கவில்லை, "பேசி" எனும் வார்த்தை *(phthengomai)* பிலேயாமின் கழுதை பேசினதைக் குறித்து பயன்படுத்தப்படுகிறது (2:16). புதிய ஏற்பாட்டின் வேறு இடங்களில் நடபடிகள் 4:18ல் மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது வழக்கமாக சத்தமிட்டு பேசுதல் அல்லது ஆரவாரத்துடன் பேசுவதை பொருள்படுத்துகிறது. பேதுரு தனக்குத்தானே தெளிவாக்கிக் கொள்ள, கள்ளப் போதகர்களின் வார்த்தைகள் "அகந்தையானவை" *(huperonkos)* என்று சொன்னார். பேசப்படுகிற குணப்பெயர்ச்சொல் பெரும்பாலும் சரிசம அளவில் பெரிதுபடுத்திக் காட்டப்பட்டவை. அவர்களுடைய வார்த்தைகள் கம்பீரமாகவும் நயவசனிப்புமானவை, ஆனால் அதேவேளையில் அவை பிரயோஜனமற்றவை.

கிறிஸ்துவுக்குள் அதிக வளர்ச்சி பெற்றவர்கள் கள்ளப் போதகர்களை அடையாளங்காண முடியும், ஏனெனில் அவர்கள் என்னவாக இருக்கிறார்கள் என்பதும், "மாம்ச இச்சைகளினாலும்" **காம விகாரங்களினாலும்** அந்த கள்ளப் போதகர்கள் தந்திரமாய்ப் பிடிப்பதில் வெற்றிகண்டு **வஞ்சகமாய் நடக்கிறவர்களிடத்தில் அரிதாய் தப்பினவர்களிடத்தில்** வலையை விரிக்கிறார்கள். "காமவிகாரம்" எப்படி செயல்படுகிறது என்று அறிவது கடினம். இதன் பொருள் ஒருவேளை கள்ளப் பேதகர்கள் "மாம்ச இச்சைகளுக்கும்" "காம விகாரத்துக்கும்" போதனையால் புதிதாய் மனமாற்றப்பட்டகளிடத்தில் பிரயோகிக்கலாம். மறுபுறம் பார்த்தால் "காமவிகார" நடக்கையை கள்ளப் போதகர்கள் தாமே புதிதாய் மனமாற்றப்பட்டவர்களை தந்திரமாய் பிடிக்க பயன்படுத்தியிருக்கக் கூடும். தெளிவாய்த் தெரிந்த வரைக்கும்: பழங்கால மற்றும் நடப்பு நாகரீக கால உலகத்தில் இளமையும் விசுவாசத்தில் அனுபவமில்லாதவர்களுமாகியவர்களிடத்தில் கள்ளப் போதகங்கள் எளிதில் மாற்றங்களை ஏற்படுத்திவிடும். கள்ளப் போதகர்கள் அவர்களுக்கு வலை விரிக்கிறார்கள்.

**வசனம் 19.** பேதுருவின் எதிரிகளைக் குறித்த விளக்கம் பற்றி வியாக்கியான உரைகள், இரண்டாம் நூற்றாண்டு மறையியல் ஞான உபதேசங்கள் என வெகு சீக்கிரத்தில் முடிவெடுத்து விடுகின்றன. மறையியல் ஞான உபதேசங்கள் ஒரு தொகுப்புச் சிந்தனைக்குரிய முறை அதை இப்போதைக்கு நாம் ஆராய்வது மிகவும் அதிகமானது.[13] சில மறையியல் ஞான போதகர்கள் ஒழுக்கக் கட்டுப்பாடற்ற சுயாதீனத்தை பரிந்துரைத்தனர், என்பது உண்மையே; ஆனாலும் பேதுரு குறிப்பிடும் ஒழுக்கக் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஆதாரமாக மறையியல் ஞானிகளின் சுயாதீனவாக்குத்தத்தம் பற்றி எடுத்துக் கொள்வது ஆதாரத்திற்கதிகமானதாக இருக்கிறது. முகவுரையில் ஆலோசனையாக சொன்னது போல, 2 பேதுருவும் யூதாவும் யூத- கிறிஸ்தவ இலக்கிய கலைகளிலிருந்து பலஸ்தீனாவிலும் சிரியாவிலும் பெரிய அளவில்

எழும்பியிருக்குமேயாகில், கி. பி. 66-70 வரை நடந்த யூதப் போராட்டத்தில் யூத கிறிஸ்தவத்துக்கு பொருந்துபவையாக இரண்டு நிருபங்களுமே காணுகின்றன.

விசுவாசமுள்ள யூதர்களை தமஸ்குவில் போய் கைது பண்ண பவுல் மேற்கொண்ட பயணத்தின் மூலம் (நடபடிகள் 9:1, 2) அந்தப் பகுதியிலிருக்கிற யூதர்களுக்கு கிறிஸ்தவச் செய்தி போய்ச்சேர்ந்திருந்தது என்ற கருத்தை ஆலோசனையாகச் சொல்லப்படுகிறது. மேலும், யாக்கோபு, யூத கிறிஸ்தவம், சிரியா, மற்றும் மறையியல் ஞானக் கோட்பாட்டு பரவல் நாக் ஹமாட்டிலிருந்து நுழைந்த சில கொள்கைகள் ஆகிய அனைத்துக்கும் தொடர்பு உண்டு.[14] கிறிஸ்தவம் அறிமுகம் பெற்ற சில பத்தாண்டுகளுக்குள், சிரியாவிலும் பலஸ்தீனாவிலுமிருந்த சில விசுவாசித்த யூதர்கள் விருத்தசேதனத்திலிருந்து சுயாதீனம் மற்றும் வேறு சடங்காச்சாரங்களான மோசேயின் பிரமாணத்திலிருந்து சுயாதீனம் ஆகிய போதனைகளை எடுத்துக் கொண்டு இயன்றவரை (பழைய ஏற்பாட்டுப்) பிரமாணம் கிறிஸ்தவத்தை கட்டுப்படுத்துவதில்லை என்ற கருத்தை பதிவு செய்தனர். அவர்கள் அஞ்ஞான தத்துவங்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் ஏனெனில் அந்த காலக்கட்டத்தில் அது பொதுவாய் நடக்கக் கூடியதாயிருந்தது. நேரம் வந்தபோது அவர்களுடைய போதனை மறையியல் ஞான கோட்பாட்டை விரிவடையச் செய்யக் கூடியதாயிருந்தது, ஆனால் பேதுரு எழுதியபோது இருந்த சூழ்நிலை அந்த செயல்பாட்டின் துவக்கமாக மட்டுமே இருந்தது.

கள்ளப் போதகர்கள் புதிய கிறிஸ்தவர்களை **சுயாதீனத்தை வாக்குத்தத்தம்** பண்ணி தந்திரமாய் பிடித்தார்கள், “சுயாதீனம்” என்பது புதிய ஏற்பாட்டில் ஒரு முக்கியமான வார்த்தை. சத்தியமே தமது ஜனங்களை விடுதலையாக்கும் என்று இயேசு சொன்னார் (யோவான் 8:32, 33). பவுல், “சுயாதீனத்திற்கென்றே கிறிஸ்து நம்மை அழைத்திருக்கிறார்” என்று தைரியத்துடன் அறிவித்தார் (கலாத்தியர் 5:1). கட்டாயத்தின் பேரில் அடிமையாக்கப்படலாம், ஆனால் ஜனங்கள் தங்கள் சுயாதீனத்தை அப்படி இழப்பதில்லை. சிலர் அறியாமையினால் அடிமைகளாகின்றனர், வேறு சிலர் செயற்கையான சட்டதிட்டங்களால் அடிமையாகின்றனர், இன்னும் சிலர் சுய மனவிருப்பத்தின்பேரிலும் மாமிச இச்சைகளைப் பின்பற்றுவதனாலும் அடிமைகளாகின்றனர். “சுயாதீனத்தை” வாக்குத்தத்தம் பண்ணுகிற **போதகர்களே கேட்டுக் அடிமைகளாயிருக்கின்றனர்** என்று பேதுரு சொன்னார்.

அப்போஸ்தலன் வியப்பூட்டும் மனதால் அறியும் மனோத்தத்துவ திராணியை தம் வாசகர்களுக்குக் கொடுத்தார்: **எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கே அவன் அடிமையாயிருக்கிறான்.** பேதுரு கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாயிருப்பதையும் பாவத்தையும் தம் மனதில்கொண்டிருந்தார். பாலுணர்வுக்கு இடமளிப்பது கூட அடிமையாக்கலாம். அது ஜனங்களின் பாதுகாப்பான வீட்டை கொள்ளையிட்டு தங்கள் பிள்ளைகள் பெரியவர்களாவதைக் காணும் சந்தோஷத்தைக் கெடுக்கலாம். தங்களுடைய பாலுணர்வுக்கு அடிமைகளாகிப் போகும் ஜனங்கள் சில வேளைகளில் தங்களுடைய வாழ்வின் விதத்தில் நம்பிக்கையற்ற அழிவைச் சந்திக்கலாம். அதிலிருந்து அவர்கள் வெளியேற விரும்பக் கூடும், ஆகிலும் அவர்கள் பெரிய சிக்கலுக்குள்ளாகி, அதிலிருந்து

*வெளியேறுவது எப்படி என்று தெரியாமல் இருப்பார்கள். இதே விதமாக, பொருளாசைக்கும், மதுபான வெறிக்கும் அல்லது போதை தரும் மருந்தின் குடிப்பழக்கத்தின் அடிமைத்தனத்துக்கும், மற்றும் கசப்புக்கும் சொல்லலாம். இயேசு தமது ஜனங்கள் மீது கொடுக்கிற கட்டுப்பாடுகளெல்லாம் நல்லதுக்கும், சந்தோஷத்திற்கும், நிறைவான வாழ்வுக்கும் தான்.*

***வசனம் 20.*** *பேதுரு தொடர்ந்து கள்ளப் போதகர்கள் புதிதாக கிறிஸ்துவினிடத்தில் மனமாற்றப்பட்டவர்கள் மீது கொண்டிருந்த செல்வாக்கு பற்றிப் பேசினார். இலக்கண ரீதியாக இந்தச் சொற்றொடரில் சொல்லப்படும்* ***அசுத்தங்களுக்கு தப்பினவர்கள்*** *மறுபடியும்* ***அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால்,*** *என்பது ஒன்றேல் கள்ளப் போதகர்களுக்கு பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் அல்லது அவர்களின் செல்வாக்குக்குட்பட்டிருந்த ஆவிக்குரிய வளர்ச்சியற்றியிருந்தவர்களைக் குறிப்பதாயிருக்கலாம். அப்போஸ்தலர் சொன்னவை விசுவாசத்திலிருந்து வழுவிப் போவதற்கும் பொருந்தக் கூடியவை, அவை தங்களுடைய கலகமூட்டுதலில் நிலைபெற்றிருந்தாலும், அல்லது தவறாக வழிநடத்தப்பட்ட புதிய கிறிஸ்தவனாயிருந்தாலும் தவறான தகவல் பெற்றவனாயிருந்தாலும் இதுதான் உண்மை. எந்த நிலையிலும்,* ***அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும்.*** *எப்படியிருப்பினும், இந்த வசனம் ஒரு எச்சரிக்கையைக் கொடுக்கிறது; அது அக்கறையை வெளிப்படுத்துகிறது. கள்ளப் போதகர்களுக்கே இது மிகவும் தாமதமான எச்சரிக்கைதான். அவர்கள் "கெட்டழிவார்கள்" (2:12). அவர்கள் "கறைகளும் இச்சைகளுமாயிருந்தார்கள்" (2:13, 14). இந்த வசனத்தில் சொல்லப்படுகிற எச்சரிக்கை "உறுதியில்லாத ஆத்துமாக்களுக்குத் தான்" (2:14), விசேஷமாக புதிதாய் மனமாற்றப்பட்டவர்களுக்கு. இந்தக் கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலர்களை எதிர்த்துப் போதிக்கும் போதகர்களின் வழிகாட்டலை பின்பற்றுவார்களாகில் அவர்களுடைய நிலைமை அவர்கள் சுவிசேஷத்தைக் குறித்து கேள்விப் படாதிருந்த முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும்.*

*பேதுருவைப் பொறுத்தமட்டில், கிறிஸ்தவனாக மாறுவது உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்புவதுதான். இந்த "அசுத்தம்" என்ற வார்த்தை (miasma) புதிய ஏற்பாட்டில், இங்கு மட்டுமே காணப்படுகிறது. இது ஒழுக்க ரீதியான அசுத்தத்தைக் குறிப்பிடுகிறது, வெட்கக்கேடான செய்கைகள் தனக்கும் பிறருக்கும் அழிவைக் கொண்டு வருவது, "உலகம்" என்பது மிகப்பெரிய கூட்ட ஜனங்களின் நடத்தையை பொதுவாகக் குறிக்கிறது, அது அழிவுக்கு இட்டுச் செல்வது. உலகத்தின் போக்கிலே போவது துக்கத்தில் கொண்டு போய் விடும், அது தேவனுடைய பார்வையிலும் அப்படிப்பட்டவனுடைய சகாக்களிடத்திலும் அவமதிப்பு மிக்கச் செயல். அது ஒருவன் தனது சுய ஆத்துமா மீது கவனம் செலுத்தி பேராவலுடன் வாழ்வதை சிதைக்கிறது, ஒருவன் கிறிஸ்துவுக்கு செவிகொடுக்கும் போது, கர்த்தர் அவனை உளையான பாவச் சேற்றிலிருந்து தூக்கி விடுகிறார். அவன் தேவனிடத்தில் ஒப்புரவாகிறான்; களங்கப்படுத்தும், அசுத்தப்படுத்தும் வாழ்வுமுறையிலிருந்து அவன் தப்பிக்கிறான். உலகமும் அது அளிக்கிற வேடிக்கையான வாக்குறுதிகளும், அதன் சுய நல வழிகளும், அதன் பரிசுத்தத்தை வெறுத்து ஒதுக்கும் தன்மையும், வஞ்சித்து அழிவை ஏற்படுத்துகிறது. கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பது என்பது*

அவைகளின் வெட்கக் கேடான காரியங்களிலிருந்து தப்பித்துக் கொள்வது தான்.

உலகத்தின் அசுத்தங்களுக்கு தப்பித்துக் கொள்ளுதல் **கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவை அடைவதுதான்.** பேதுருவினாலும் மற்ற அப்போஸ்தலர்களாலும் கொடுக்கப்பட்ட செய்திகளும் சாட்சியங்களும் கிறிஸ்துவாகிய மூல ஊற்றிலிருந்து வந்த “அறிவு” மற்றவர்களும் அறிவு பற்றி உரிமை கொண்டாடினார்கள், ஆகிலும் அந்த அறிவு சுயத்திற்கு - சேவை செய்யத்தக்க புத்திக் கூர்மை. விசுவாசிகள், யோவானின் வார்த்தையில் சொல்வோமானால் “ஆவிகளை சோதித்தறிய வேண்டியவர்கள்” (1 யோவான் 4:1). ஒரு போதகனுக்கு செவிகொடுத்துக் கற்றுக் கொள்ள ஒரு நேரமுண்டு, ஆகிலும் வினயமற்ற ரீதியில் கவனித்தவால் ஒருவன் “மறுபடியும் சிக்கிக் கொண்டு” தான் தப்பின அதே அசுத்தங்களால் **ஜெயிக்கப்படுகிறான்.** உலகத்திலிருந்து சமீபத்தில் கிறிஸ்து வழிநடத்தும் வாழ்க்கைக்குத் தங்களை மாற்றிக் கொண்டவர்கள் கள்ளப் போதகர்களின் வார்த்தைகளுக்கு செவிகொடுத்து எளிதாக வீழ்ந்து போகும் நிலையிலிருக்கிறார்கள், விசேஷமாக எந்த ஒரு நிபந்தனையுமில்லாத எளிய இரட்சிப்பை வாக்குத்தத்தம் செய்கிறவர்களிடத்தில் விழுந்து போவார்கள்.

உலகத்திற்கே மறுபடியும் திரும்பினவர்களைக் குறித்து எதிர்பாராத வார்த்தையை பேதுரு பயன்படுத்தி, “அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும்” என்றார். அவர்கள் கிறிஸ்தவர்களாவதற்கு முன் அவர்கள் தங்கள் ஆத்துமாக்களை இழந்தவர்களும், கோபாக்கினையின் பிள்ளைகளும், நம்பிக்கையற்றவர்களுமாயிருந்தனர், அவர்கள் உலகத்துக்குத் திரும்புவார்களானால், அதைக் காட்டிலும் மோசமான நிலைமை எப்படி இருக்கக் கூடும்? அவர்களுடைய இரண்டாவது நிலை எப்படிப்பட்ட படுமோசமான நிலையிலிருக்கும் என்பதை யூகிக்க மட்டுமே முடியும். இயேசு, “எவனிடத்தில் அதிகங்கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்; மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள்” என்றார் (லூக்கா 12:48). “கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவை” ஒருவன் அடையும் போது அவனிடத்தில் அதிகமாய் ஒப்புக்கொடுக்கப்படுகிறது. அவன் “பரம ஈவை ருசிபார்த்தவன்” (எபிரெயர் 6:4). நியாயத்தீர்ப்பிலே, இயேசு வரும் போது, அவன் தான் இழந்த சந்தர்ப்பங்களுக்கும் மீறின வாக்குத்தத்தங்களுக்கும் பதில் கொடுக்க வேண்டியவனாயிருப்பான். இரட்சகரிடத்தில் வருவதற்கென கொஞ்சமான சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டவனைக் காட்டிலும் மேற்சொன்னவனுடைய தண்டனை மிகக் கடுமையாக இருக்கும். அவனுக்கு உண்டாகும் வேதனை எவ்வளவு மோசமாக இருக்கக் கூடும் என்று நாம் யூகிக்காமல் இருப்பதே நலம்.

இயேசுவும் அப்போஸ்தலர்களும் போதித்தவைகளிலிருந்து, தெளிவாகத் தெரிவது என்னவெனில், கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்கள், தங்கள் தெரிவுபடி, இரட்சகருக்கு தங்கள் புறமுதுகைக் காட்டினார்கள். கிறிஸ்துவுக்குள் ஒருவன் இருப்பதே அவன் தொடர்ந்து கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பான் என்பதற்கான உத்திரவாதம் அளிப்பதில்லை. மிகப் பிரசித்தமாய்ப் பேசப்படுகிற ஒரு உபதேசம் “ஒருமுறை இரட்சிக்கப்படுதல் எப்பொழுதும்

*இரட்சிக்கப்பட்டிருத்தல்" என்று அடிக்கடி சொல்லப்படுவதுண்டு. ஆகிலும் அது திருமறையின் போதனையல்ல. பவுல் தன்னைக் குறித்துக் குறிப்பிடுகையில் மற்றவர்களுக்கு தான் போதித்தபின், தானே "ஆகாதவனாய் போய்விடாதபடிக்கு" தன்னை ஒடுக்குவதாகக் குறிப்பிடுகிறார் (1 கொரிந்தியர் 9:27;* KJV). *அசுத்த ஆவியைத் தனக்குள் கொண்டிருந்த ஒரு மனுஷனைப் பற்றி இயேசு ஒரு உவமையைச் சொன்னார். அந்த ஆவி அவனை விட்டு புறப்பட்டுப் போய் தனக்குப் பொருத்தமான வேறு தங்குமிடத்தைக் கண்டு பிடிக்க இயலவில்லை. திரும்பிவந்து பார்த்த போது அந்த மனுஷன் எந்த ஒரு நல்ல காரியத்தாலும் தன்னை நிரப்பிக் கொண்டிருக்க வில்லை என்பதை அது அறிந்தது. அந்த ஆவி தன்னோடே கூட வேறே பொல்லாத ஏழு ஆவிகளை கூட்டிக் கொண்டு வந்தால் ஏற்றுக் கொள்ளும் மனதுடையவன் போல் காணப்பட்டான். உவமையில் ஒருவன் பரிசுத்தமாக்கப்பட்டு அவன் தனது முந்தின பாவ வாழ்க்கைக்கு திரும்ப ஏதுவுண்டு என்பதைக் காட்டுகிறது (மத்தேயு 12:43-45).*

***வசனம் 21.*** *முந்தின வசனத்தின் தொடர்ச்சியாக விரிவுபடுத்தி கடைசி சொற்றொடரை தெளிவுபடுத்தியிருக்கிறார். இரண்டுமுறை அவர் அறிதல் பற்றி குறிப்பிடுகிறார். அதுபற்றிய கருத்தின் தொடர்ச்சியான, "வஞ்சகமாய் நடக்கிறவர்களிடத்திலிருந்து அரிதாய்த் தப்பினவர்கள்" என்றார் (2:18). கிறிஸ்துவை அறிந்து கொள்ளும் அறிவு என்பது ஒருவர் தனது விசுவாசத்தை அவரிடத்தில் வைத்து, அவரிடம் வந்து, அவருக்குக் கீழ்ப்படிந்து, தனக்கு ஜீவனைக் கண்டடைவதற்கு ஒப்பானதாக இருக்கிறது. கள்ளப் போதகர்களைப் பின்பற்றுவோர்,* ***நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகு-வதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும்.*** *லூக்கா உண்டு பண்ணின இரண்டாவது பிரபந்தமாகிய, அப்போஸ்தலர் நடபடிகளில், இயேசு கிறிஸ்துவின் சபையை எளிமையாக, "இந்த மார்க்கத்தார்" என்று சொன்னார் (நடபடிகள் 9:2; 19:9, 23; 22:4; 24:22) பேதுருவுக்கு அது "சத்தியமார்க்கம்" (2 பேதுரு 2:2), "செம்மையான வழி" (2 பேதுரு 2:15), மற்றும் "நீதியின் வழி."*

*"பரிசுத்த கற்பனை" என்பது பரிசுத்த ஜீவியத்திற்குத் தேவையானதும் முக்கியமானதுமானவைகளை உள்ளடக்கிய உபதேசத்தைக் குறிக்கிறது, அதுவே சுவிசேஷத்தின் இயல்பு. பேதுரு "கற்பனை" எனும் வார்த்தையைப் பயன்படுத்தினார், அது சுவிசேஷம் என்பதற்குப் பதிலாக பயன்படுத்தின வார்த்தை, ஏனெனில் கள்ளப் போதகர்கள் தங்கள் பிரச்சனைகளை நியாயப்பிரமாணத்தோடு சம்பந்தப்படுத்தியிருந்தனர். அவர்கள் "கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும்" சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணினார்கள் (2:19). கிறிஸ்துவிடமிருந்து திரும்புவதற்கு முதல்படி, ஒருவர் தனது "முதலில் கொண்டிருந்த அன்பை" விட்டு விலகுவது (வெளிப்படுத்தின விசேஷம் 2:4), என்பது நியாயப்பிரமாணத்தின் கட்டுப்பாடுகள் மீது கோபமடைவது. சுவிசேஷத்தின் கோரிக்கை கட்டுப்பாடற்ற கொள்கையல்ல. தேவன் தமது ஜனங்கள் தங்களுடைய உண்மைத்துவத்தை நிரூபிக்கும்படி உலோகம் அல்லது மரவளையம் வழியாக எகிறிகுதித்து வருவது நல்லது என்று தீர்மானிக்கப்பட்ட கட்டளையல்ல. கடந்த காலத்தைப் போலவே தேவன் "நமது நலனுக்காகவே"*

*பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார் (உபாகமம் 6:24). அவைகள் பாரமானவைகளல்ல (1 யோவான் 5:3); அவைகள் வாழ்க்கையை சந்தோஷம் மற்றும் சமாதானவழியில் நடத்துகின்றன.*

*தங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் நன்மை, நம்பிக்கை மற்றும் அந்நியோந்ய ஐக்கியத்தை கைக் கொள்பவர்கள் மனம்போன போக்கில் மாம்ச வழிக்குத் திரும்பும்போது "நீதியின் மார்க்கத்தை" அறிந்து கொள்வதற்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் அதிக பாவத்தில் கடினப்பட்டு போகிறார்கள். கிறிஸ்துவுக்கு ஒப்பான வாழ்வுக்கும் மனம் போன போக்கில் காமவிகார நடக்கையில் வாழும் வாழ்க்கைக்கும் உள்ள வேறுபாட்டை அவர்கள் அறிவார்கள். இரண்டையும் அனுபவித்தபின் அவர்கள் தங்கள் மனச்சாட்சியின்படி பின்னதானதை தெரிந்து கொண்டனர். அவர்கள் கிறிஸ்துவை அறிந்து கொள்வதற்கு முன்பும் "பரிசுத்தக் கற்பனையை," விட்டு விலகின பின்பும் அவர்கள் தங்கள் பாவங்களில் இழந்து போனவர்களாயிருந்தனர், ஆகிலும் இரண்டாவது முறையாக சுவிசேஷத்தைக் கொண்டு அவர்களிடம் போய்ச் சேருவது சந்தேகத்திற்கு இடமில்லாமல் மிகவும் கடினமான காரியமாகும். "அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும்."*

***அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட** "பரிசுத்த கற்பனை" என்று பேதுரு குறிப்பிட்டார். சத்தியத்தின் வழியை பழைய ஏற்பாட்டு வசனங்கள் மூலமும், இயேசு போதித்ததன் மூலமும், பரிசுத்த ஆவியின் வெளிப்பாட்டின் மூலமும் அப்போஸ்தலர்கள் கற்றறிந்தனர். மற்றவர்கள் யாவரும் "தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்டதன்" மூலம் வழியை (மார்க்கத்தை) பெற்றார்கள். இரண்டாயிரம் வருஷமாக "நீதியின் மார்க்கம்" தலைமுறை தலைமுறையாக ஒப்பு விக்கப்பட்டது. கிறிஸ்துவை அறிந்து கொண்டவர்களின் கடமை என்னவெனில் சுவிசேஷ செய்தியை அடுத்த தலைமுறைக்கு ஒப்புவிக்க வேண்டும். தகப்பன்மார்களும் தாய்மார்களும் தங்கள் தங்கள் பிள்ளைகளுக்கு போதிக்க வேண்டும். குடும்பமும் சபையும் ஒன்றாக சத்தியத்தை அறிந்தவர்களுக்கு அப்பால் உள்ளவர்களை அணுகி மற்றவர்களை "நீதியின் மார்க்கத்தில்" நடத்த வேண்டும். தொடர்ந்து நீடித்திருக்கும் வாழ்வுக்கு தேவன் வசனத்தை ஒப்புக்கொடுப்பதும் தொடர்ந்து அடுத்து வருவோருக்கு போய்ச் சேரப் பண்ணுவதுமேயன்றி வேறு எந்த திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை. மக்கள் என்ற வகையில் சபையிலுள்ள ஜனத்தார் சகல தேசத்தாருக்கும் போய் சுவிசேஷத்தை பிரசங்கிக்கிற ஊழியத்தைச் செய்ய வேண்டும். இந்தப்பணி ஒருபோதும் தவறாததாயிருப்பதாக!*

***வசனம் 22.** ஒரு ஆத்துமா மாம்சக்காரியங்களின் பொழுது போக்குக்காக கிறிஸ்துவை விட்டு பின்வாங்கிப் போகும்போது, அது ஒரு அழகிய காட்சியாயிராது. பரிசுத்தத்திற்குப் பதிலாக பாவத்தைத் தெரிந்து கொள்பவன் **நாய் தான் கக்கினதைத் தின்னவும்; கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது போன்றவன் ஆவான்.** கிரேக்கப் பண்பாட்டையுடைய யூதமார்க்க பழமொழிகளிலிருந்து பேதுரு இரண்டு நன்கு அறியப்பட்ட நிகழ்வை விவாதிக்கிறார், அவைகளில் ஒன்று நேரடியாக வசனத்திலிருந்து எடுக்கப்பட்டது: "நாயானது தான் கக்கினைத் தின்னும்படி திரும்புவது போல, மூடனும் தன் மூடத்தனத்துக்குத் திரும்புகிறான்" (நீதிமொழிகள் 26:11). நியாயப்பிரமாணத்தின் படி நாய், பன்றி இரண்டுமே அசுத்த மிருகங்களாகக்*

*கருதப்பட்டது. பேதுருவைப் போலவே இரண்டு மிருகங்களையும் இயேசு தமது கருத்தை விளக்குவதற்காக பயன்படுத்தினார் (மத்தேயு 7:6).*

*கள்ளப் போதகர்களை நடத்துகிற விஷயத்தில் பேதுரு இவ்வளவு உக்கிரமாக இருக்கக் காரணம் என்ன? சாந்தத்தோடே இருந்து, "சிலரை அக்கினியிலிருந்து இழுத்து விட்டு, இரட்சிக்க இயலும்" என்ற நம்பிக்கையிலிருப்பது நலமல்லவா (யூதா 23)? 2 பேதுரு 2 ஐ வாசிக்கும் போது மனதில் அரிதாகவே தோன்றுகிற காரியம் "சாந்தம்." சாந்தமாயிருக்க ஒரு நேரமுண்டு, நேரம் வரும் போது திட்ட வட்டமாக பேசவும் ஒரு நேரம் உண்டு. சத்தியத்தை எதிர்த்தவர்களிடம் இயேசு வெளிப்படையாகப் பேசினதால் தமக்கு விரோதிகளை சம்பாதித்துக் கொண்டார் (மத்தேயு 23). ஒரு கிறிஸ்தவன் தனது தனிப்பட்ட தாக்குதலுக்கு இயேசுவின் வார்த்தைகளையோ அல்லது பேதுருவின் வார்த்தைகளையோ இரக்கமற்ற தன்மைக்கு நியாயப்படுத்தும்படி பயன்படுத்துவது கூடாது. மறுபுறம், கர்த்தரை நேசிக்கிறவன், அவருடைய கற்பனைகளெல்லாம் பரிசுத்தமானவை என்று எண்ணுகிறவன், நீதியுள்ள காரியங்களால் நிரப்பப்பட்டவனாய் மனுஷர்கள் தங்கள் சொந்த வழிகளை கர்த்தருடைய வழிக்குப் பதிலாக திட்டமிட்டு செயல்படுவது கண்டு கடுங்கோபமடைவான். பேதுரு எதிர்கொண்ட கள்ளப் போதகர்கள் தனிமைப்படுத்தப்பட்ட தொற்றுக் கிருமிகள் கட்டுப்படுத்தப்பட்டவர்கள் அல்ல. அவர்கள் மீட்கப்பட்ட பாவிகளை மீண்டும் அவர்கள் தப்பித்த பழைய வாழ்க்கையை அடையத்தக்கதாகப் பயமுறுத்தும் தொற்று வியாதியாயிருக்கிறார்கள். அவபக்தியுள்ள மனுஷர்கள் கிறிஸ்துவின் மார்க்கத்தை தூஷித்து, கிறிஸ்துவின் நாமத்தில் அப்படி சொல்லி செய்வது கண்டு, பேதுரு கடுங்கோபம் கொண்டார். உலகத்திற்கே மறுபடியும் இழுக்கப்பட்டவர்களைக் கண்டு அவர் கவலையடைந்தவராய், நாய் தான் கக்கினதை தின்ன திரும்பினது போல என்றார். சபைக்கு அவர் கொடுத்த எச்சரிக்கை முரட்டுத்தனமான - கையைப்போல வெளிப்படையான பேச்சாக இருந்தது. அப்படித்தான் இருக்க வேண்டும்.*

## பயன்பாடுகள்

### கிறிஸ்துவின்மார்க்கம் பழிச் சொல்லுக்கு ஆளாகும்போது (அதிகாரம் 2)

*எதிர்கொள்ளப்படுதல் சந்தோஷமற்றவை. நம்மிலே அநேகரும் சாத்தியப்படும் நேரத்திலெல்லாம் தவிர்த்து விடுகின்றனர். துரதிஷ்டவசமாக, சூழ்நிலை வரும்போது, எதிர்கொள்ள வேண்டியதை தவிர்ப்பது மதிப்புக்கு அப்பாற்பட்ட ஒரு கோழைத்தனம். சுயவிருப்பத்தை நிறைவேற்றுவோரும் சுய நலக்காரரும் பொறுப்பு ஏற்கும்போது நல்ல ஆண்களும் நல்ல பெண்களும், நன்கு அறிந்திருந்தும், அமைதியாக அவைகள் சம்பவிக்க இடமளிப்பது பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும். "துன்மார்க்கருக்கு முன்பாக நீதிமான் தள்ளாடுவது கலங்கின கிணற்றுக்கும் கெட்டுப்போன சுனைக்கும் ஒப்பாயிருக்கிறது" (நீதிமொழிகள் 25:26). சபை தேவனைக் கனப்படுத்த வேண்டுமானால் அதனுடைய உபதேசங்களெல்லாம் தூய்மையானதாக காக்கப்படுவதற்கு, நல்லவர்களும் அறிவு பெற்றவர்களுமாகிய ஜனங்கள் பேச வேண்டிய*

இடத்தில் பேசுகிற தைரியத்தைப் பெறவேண்டும். பேதுரு தமது நிருபத்தை எழுதின சிலரை கள்ளப் போதகர்கள் தங்கள் வசப்படுத்தியிருந்தனர், ஆகிலும் வேறு சிலர் மந்தப்புத்தியுள்ளவர்களாயிருந்துள்ளனர். அப்போஸ்தலன் அவர்களின் விசுவாசமுள்ளவர்களை சத்தியத்திற்காக நிலைத்திருக்கும்படி பட்டியலிட்டார்.

## அவர்கள் நம்மையே வியாபாரமாக்குகின்றனர் (2:1-3)

நியூயார்க் நகரத்தில் கொலம்பியா பல்கலை கழகத்துக்கு அருகில் நடைபாதை ஓரத்தில் பிச்சைக்காரர்கள் ஒன்று கூடுவர். ஒரு கோடை காலத்தில் நான் சில ஆய்ச்சிக்காக சென்றிருந்த போது ஏறத்தாழ ஒவ்வொரு நாளும் அவர்கள் இருந்த பகுதிவழியாக கடந்துபோவேன். ஒருநாள் அடிக்கடி நான் பார்த்த ஒரு பிச்சையெடுத்துக் கொண்டிருந்த ஒரு பெண்மணி மென்மையாக எழுதும் முனைகொண்ட பேனாவை விற்றுக் கொண்டிருந்ததைப் பார்த்தேன், அவளைக் குறித்த நல்லெண்ணம் எனக்கு உண்டாயிற்று. அவள் வெறுமனே பிச்சைகேட்பதற்குப் பதிலாக தனக்கு ஏதாவது ஒரு சேவையைச் செய்து கொண்டிருந்தாள். அவள் கேட்ட பணத்துடன் கொஞ்சம் சேர்த்து கொடுத்து. பேனாக்களை எடுத்துக் கொண்டு என்னுடைய கட்டண விடுதிக்குப் போனேன், அங்கே அவைகளைத் திறந்தேன். அவை ஒவ்வொன்றும் எலும்புக்கு ஒப்பாக காய்ந்துபோய் காணப்பட்டன. அதைக் குறித்து இப்பொழுது சிரிக்கிறேன், ஆனால் அப்பொழுது சிரிக்கவில்லை. இப்படி ஏமாற்றப்படுவது எனக்கு இது முதல் தடவையல்ல (கடைசித்தடவையுமல்ல). நம்மிலே பெரும்பாலோனோர் தாங்கிக் கொள்ள கடினமான விஷயம் அதை நல்ல எண்ணத்துடன் ஏற்றுக் கொள்வதுதான்.

கள்ளப் போதகர்கள் சபைகளுக்கிடையே பிரிவினைகளை ஏற்படுத்துகிற செய்திகளைப் பரப்பிக் கொண்டிருந்தபோது பேதுரு அவர்களைக் குறித்து விவரித்து தமது வாசகர்களுக்கு, மேற்சொன்ன உதாரணத்துக்கு ஒப்பாக, “அப்படியே உங்களுக்குள்ளும் இருப்பார்கள்” என்றார். அவர்கள் எப்படிப்பட்ட பேனாக்களை விற்றார்கள் என்று அறிவதில் நாட்டமாக இருப்போம், ஆனால் அது முக்கியமானதல்ல. வஞ்சிக்கிற உபதேசம் தலைமுறைக்குத் தலைமுறை மாறுபடும். ஏமாற்றுதல் மட்டும் ஒரு தொடர்கதை. போதகர்களின் வாழ்வு முறைகளும், அவர்களின் கனிகளுமே இங்கு முக்கியம். பேதுரு அவர்களின் உபதேசக் கோட்பாடுகள் இன்னது என்று விவரித்திருப்பாரானால் ஆர்வமாக இருந்திருக்கக் கூடும், ஆனால் அவரது எச்சரிக்கையூட்டும் போதனைகள் நமக்கு மிகுந்த பிரயோஜனமுள்ளவைகளாக உள்ளன. அதனால் நாம் பொதுவாக மார்க்க விரோதிகளிடம் நடந்து கொள்ளும் விதத்தைத் தெரிந்து கொண்டு செயல்பட முடியும். கள்ளத் தீர்க்கதரிசிகளை அவர்களுடைய கனிகளாலே அறிந்துகொள்ளக் கூடும் என்று இயேசு சொன்னார் (மத்தேயு 7:15, 16). இயேசுவைப்போல பேதுருவும் கள்ளப் போதகர்கள் கொடுக்கும் கனிகளைக் குறித்து அவர்களுடைய உபதேசக் கோட்பாடுகளைக் காட்டிலும் அதிகமாக அக்கறைகாட்டினார்.

## கள்ளப் போதகர்களின் காம விகார நடத்தை (2:2, 18)

புராதன காலத்திலும் இப்போதைய நாகரீக காலத்திலும், காம விகார

*ஆசைக்களுக்கு ஜனங்களை ஒருவன் வசப்படுத்திக் கொள்வது சுலபமான செயல், அவன் அவர்கள் செய்வது சரியான செயல்தான் என்று உறுதிபடக் கூறலாம், The Da Vinci Code, எனும் நாவல் கூறும் செய்தியும் இதுதான், 2006ல் இது ஒரு பிரசித்த பெற்ற நாவலாக இருந்தது, அந்தப் புத்தகத்தின் எழுத்தாளர் சபை தேவையில்லாத அளவுக்கு பாலுணர்வு விஷயத்தை அடக்கி ஒடுக்குகிறது என்று வாசகர்களை நம்பச் செய்திருக்கிறார். சத்தியத்திற்கு எதுவும் அதிகத் தொலைவில் இல்லை. The Da Vinci Code, என்பதைப் பற்றிய பகுத்தாய்வில்,* James L. Garlow *மற்றும்* Peter Jones *ஆகியோர் கீழ்வருமாறு எழுதின* C. S. Lewis, *ஐ மேற்கோள் காட்டியுள்ளனர். அவர் எழுதினதாவது,*

> *ஒரு இச்சையுள்ள மனுஷன் இரகசியத்தேடுதலில் தெருக்களில் சுற்றிக்கொண்டிருக்கையில், அவனைக்குறித்து ஒரு மிகவும் துரதிஷ்டவசமான ஒரு தனிமரபை நாம் பயன்படுத்துவோம், அந்த மனிதனுக்கு "ஒரு பெண் தேவை." கண்டிப்புடன் பேச வேண்டுமானால், அவன் விரும்புவது ஒரு பெண்ணையல்ல. அவனுக்கு வேண்டியது ஒரு சந்தோஷம், அதற்குத் தேவை ஒரு பெண்தான் சோதனை செய்து பார்க்கும் ஒரு உபகரணமாகத் தேவைப்படுபவள். அவன் எவ்வளவாய் அந்தப் பெண்ணைக்குறித்து அக்கறைப்படுகிறான் என்பது அவன் தான் விரும்பியதை அடைந்து ஐந்துநிமிடங்களுக்குப் பிறகு அவனுடைய எண்ணப்போக்கிலிருந்து அளவிட முடியும். (சிகரெட்களைப் புகைபிடித்த பின் ஒருவன் காலிப் பெட்டியை கையில் வைத்துக் கொண்டிருக்க மாட்டான்).*[15]

## *சுதந்திரமும் கட்டுப்பாடும் (2:19)*

*சுதந்திரம் ஆசீர்வாதமாக இருக்க வேண்டுமானால் அது ஒரு கட்டுப்பாட்டு எல்லைக்குள் செயல்பட வேண்டும். அது சரீரப்பிரகாரமான காரியங்களில் போலவே ஆவிக்குரிய காரியங்களிலும் உண்மை. உதாரணமாக, புவிஈர்ப்புவிசை கட்டுப்பாடு இல்லாமல், வாழ்வாதாரம் என்பது சாத்தியமில்லாத ஒன்று. புவிஈர்ப்பு விசை நமது சுதந்திரத்தை மட்டுப்படுத்துகிறது. என்பது ஒரு வகையில் உண்மை, ஆனாலும் அது இல்லாமல் நாம் இயங்க முடியாது. ஒரு கூரையின் மேல் பரப்பில் மிதப்பதாக கற்பனை செய்து கொள்ளுங்கள், கீழே வருவது என்பது முடியாதது. பறவைகளும், விமானங்களும் பறக்க முடிகிறது, ஆனாலும் அவைகள் பூமியிலே இறங்க விரும்பும்போது, அங்கே புவிஈர்ப்பு விசை உதவுகிறது, அதே போல, கட்டுப்பாடில்லாத சுதந்திரமும் ஒழுக்கமாகிய ஆகாய விரிவில் பறந்து கொண்டுள்ளது, அதற்கு கட்டுப்பாடு இல்லாவிடில் வாழ்க்கைக்கு வழிகாட்டி வேறெதுவுமில்லை என்று அர்த்தமாகிவிடும். சரியும் தவறும், தங்களுக்கும் மற்றவர்களுக்கும், எந்த ஒரு அர்த்தத்தையும் கொடாது. நீங்கள் எவருமே உங்களிடத்தில் உண்மை பேசுவதில்லை என்பதால் ஒருவரையும் உங்களால் நம்பமுடியவில்லை என்று ஒரு காட்சியை மனதில் நிறுத்திப்பாருங்கள், ஏனெனில் ஜனங்கள் தாங்கள் விரும்புவதைச் சொல்ல உரிமை (சுதந்திரம்) பெற்றிருக்கிறார்கள். திருடுவது தவறு இல்லை என்று இருக்குமானால், உங்களுக்கு உண்டாயிருக்கிற எல்லாவற்றின் மீதும் எப்போதும் உங்கள் பார்வையை வைத்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கும் என்பதை கற்பனை செய்து பாருங்கள்.*

*கிறிஸ்தவர்கள் சுதந்திரமான மக்கள், ஆனால் தேவன் அவர்களுக்கு விதித்திருக்கிற கட்டுப் கட்டுப்பாட்டுக்குள் அவர்களுடைய சுதந்திரத்தை உபயோக்கிறார்கள். சபைகளை மிரட்டிக்கொண்டிருந்தவர்களும் பேதுரு எழுதியவர்களுமாகிய கள்ளப் போதகர்கள் அப்போஸ்தலர்களைக் காட்டிலும் கூடுதல் சுதந்திரம் கொடுப்பதாக வாக்குறுதிகளை அளித்து சில கிறிஸ்தவர்களுக்குள் கற்பனைகளை வளர்த்தார்கள். இதை பேதுரு குறிப்பிடுகையில் "தாங்களே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும் அவர்களுக்கு சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணுகிறார்கள்" என்றார். பிறகு ஒரு உலகளாவிய சத்தியத்துடன் சேர்த்து, "எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கிறானே" என்றார் (2 பேதுரு 2:19). இதற்கு ஒப்பாக பவுலும் சொன்னதாவது, "மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக் கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?" (ரோமர் 6:16). பாவத்தின் மாபெரும் அபாயம் பெரும்பாலும் உணரப்படாமல் போகிறது. சில நேரங்களில் ஒரு நபர் தனது பாவங்களை விட்டொழிக்க ஆயத்தமாகும்போது, அந்தப்பாவம் அவனை விட்டு விடுவதில்லை. ஒரு பழங்கால ஞானி, "... அந்தப் போருக்கு நீங்கிப் போவதுமில்லை; துன்மார்க்கரை துன்மார்க்கம் விடுவிக்கவுமாட்டாது." (பிரசங்கி 8:8;* NIV*) என்றார்.*

### *உலகத்தின் அசுத்தங்கள் (2:20-22)*

*மிக அதிகமான செல்வாக்குப் பெற்றதும் ஒருபோதும் இருந்திராததுமான ஒரு இலக்கிய படைப்பு டாண்டே எனும் இத்தாலியனால் பதினான்காம் நூற்றாண்டின் துவக்கத்தில் வெளியிடப்பட்டது. அவருடைய பிரசித்திபெற்ற படைப்பு தெய்வீக நகைச்சுவை (Divine Comedy). என்பதாகும். அதிலே அவர் தானே பரலோகத்துக்கும், உத்தரிப்பு ஸ்தலத்துக்கும், நரகத்துக்கும் கூட பயணிப்பது போன்று ஒரு காட்சியை எழுதியிருக்கிறார். நரகத்திற்கு செல்லும் பயணத்தை "தீ நரகம்" என்றே பெயரிட்டார். டாண்டேயின் காட்சியில் நரகத்துக்குப் போகும் வாசல்களுக்கு பின்வரும் வரிகளை குறிப்பிட்டுள்ளார்:*

> *ஐயோ எனும் பட்டணத்துக்கு நானே வழி*
> *கைவிடப்பட்ட ஜனத்துக்கு நானே வழி,*
> *நித்திய வேதனைக்கு நானே வழி,*
> *புனித நீதி என் கட்டிட கலையை இடம் பெயர வைத்தது.*
> *தெய்வீக சர்வ வல்லவரால் இங்கே நான் வளர்க்கப்பட்டேன்.*
> *அடிப்படை அன்பு முடிவான அறிவுக் கூர்மை.*
> *இந்த அடிப்படைக்கொள்கைகளை காலம் அணிந்து கொள்ளாது.*
> *அவைகள் எனக்கு முன்பு உண்டாக்கப்பட்டவை, நானோ காலத்துக்கு அப்பால் வாழுகிறேன்.*
> *இங்கே பிரவேசிக்க விரும்புவோரே நம்பிக்கையை நீங்கள் கைவிடுங்கள்.*[16]

*மன்னிக்கப்படாத பாவம் நித்திய மரணமாகிய, வருகிற உலகில்*

தேவனிடத்திலிருந்து பிரிவினையை ஏற்படுத்துவதாகும் என்று தேவன் தெளிவாக்கியிருக்கிறார். நாம் ஒருவேளை மேலோட்டமாக காணக்கூடியது என்னவெனில் பாவம் அதன் விளைவுகளை இவ்வுலக வாழ்க்கையிலேயே கொண்டுள்ளது. பாவத்திற்கான தண்டனையின் ஒரு பகுதியை நாம் வாழுகிற உலகத்திலேயே உணர முடியும். 2 பேதுரு 2:20-22ல் அப்போஸ்தலனாகிய பேதுரு இந்தச் செய்தியைத்தான் நமக்குக் கொடுத்திருக்கிறார் கீழ்வரும் உண்மைகளை தனது வாசகர்கள் உணரும்படி அவர் விரும்புகிறார்.

(1) காம வேட்கையும் சுயநலமும்கொண்டு வாழுகிற ஒருவன், உபத்திரவத்துக்கும் மரணத்துக்கும் கொண்டு செல்லும் வழியைத் தெரிந்து கொண்டுள்ளான். பேதுருவின் வார்த்தைகளை முழு நிருபத்திற்கும் ஒரு மையபகுதிகளாக வைத்துப்பார்ப்போமாகில் அவருடைய வார்த்தைகளை புரிந்துகொள்ள நமக்கு உதவிகரமாயிருக்கும். கள்ளப் போதகர்கள் பேதுரு எழுதின சபைகளை படையெடுத்து தாக்கினர். அவர்கள் என்ன போதித்தார்கள் என்று அப்போஸ்தலன் அதிகமாக எதுவும் சொல்லவில்லை, ஆகிலும் சில விவரங்களை எடுத்துப்பார்க்கலாம்: (a) பேதுருவை எதிர்த்துப் போதித்தவர்கள் ஏதோ தங்களுக்கு விசேஷித்த அறிவைப் பெற்றிருப்பதாகப் போதித்தனர். அவர்கள் அப்போஸ்தலர்களை விட அதிகமானவைகளை அறிந்திருந்ததாக நினைத்தனர். அவர்களின் அறிவு தேவனிடம் செல்ல வழி என்று அவர்கள் சொன்னார்கள். (b) தூதர்களும் ஆவிக்குரிய சத்துவங்களும் தங்கள் பக்கம் இருப்பதாக உரிமை கொண்டாடினர். பேதுரு யூதா இருவருமே தூதர்களைக் குறிப்பிட்டு தேவனால் அவர்கள் அந்தகாரத்தில் கட்டிவைக்கப்பட்டு நியாயத்தீர்ப்பின் நாளுக்காக வைக்கப்பட்டுள்ளனர் என்றனர். (c) அவர்கள் இரண்டாம் வருகையை ஆவிக்குரியதாக்க விரும்பினர். அது உண்மையான ஒரு நிகழ்ச்சியாக இருக்கப் போவதில்லை என்று போதித்தனர். ஒரு நபர் தேவனிடத்தில் வரும்போது, அவரைப் பொறுத்தமட்டில் கர்த்தர் தமது மறுவருகையில் வந்துவிட்டார். என்று கூறினார்கள். பேதுரு "... பரியாசக்காரர் வந்து ..., 'அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? ... சகலமும் சிருஷ்டிப்பின் தோற்ற முதல் இருந்த விதமாயிருக்கிறதே' என்று சொல்லுவார்கள்" என்று எழுதினார் (2 பேதுரு 3:3, 4).

இந்தப் போதனைகளெல்லாம் எவ்வளவுக்கெவ்வளவு தொல்லை தருவதாக இருந்ததோ, அவ்வளவாய், இந்த கள்ளப் போதகர்களின் நடத்தை தான் சுவிசேஷத்தை ஒத்துப்போகச் செய்கிறது என்று பேதுரு விளங்கிக் கொண்டார். அவர் சொன்ன விதம் மிகவும் கடுமையாயிருந்தது: விபச்சார மயக்கத்தால் நிறைந்தவர்களும், பாவத்தை விட்டோயாதவர்களுமாயிருக்கிற கண்களையுடையவர்கள்; உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடித்து, பொருளாசைகளில் பழகின இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளைகள்" (2 பேதுரு 2:14).

பேதுரு தன்னுடைய வாசகர்களிடம் கள்ளப் போதகர்கள் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணினார்கள், ஆனால் அவர்கள் பரிந்துரைத்த அவர்களுடைய வாழ்க்கையோ அடிமைத்தனத்தையும் மரணத்தையும் பறை சாற்றியது என்று சொன்னார். "(அவர்கள் தாமே) கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணினார்கள்; எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு

அவன் அடிமை பட்டிருக்கிறானே" (2 பேதுரு 2:19). இயேசு இதற்கு ஒப்பாக சில காரியங்களைச் சொன்னார்: "பாவஞ்செய்கிற எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 8:34). இதே உண்மையை பவுல் இப்படிச் சொல்லுகிறார்: "மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக் கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?" (ரோமர் 6:16).

அவசியமான சில சுயாதீனங்கள் மற்ற சுயாதீனங்களை கட்டுப்படுத்துகின்றன. மற்றவர்களுக்குரியதை தனக்கென எடுத்துக் கொள்ளும் சுயாதீனத்தை ஒருவன் உடையவனாயிருந்தால், ஒரு திருடனாக இருந்து கொண்டு, அவன் நேர்மையாக மதிக்கப்படத்தக்கவான இருப்பதில்லை. ஒரு நபர் திருமணத்துக்குப் புறம்பே பாலுறவு வைத்துக் கொள்ள சுயாதீனம் பெற்றிருந்தால், அவனோ/அவளோ ஒருவரையொருவர் நம்புவதற்கு சுயாதீனம் பெற்றவர்களல்ல, புருஷனோடோ அல்லது மனைவியோடோ அன்பான தொடர்பு கொள்ள சுயாதீனம் பெற்றவர்களல்ல. பேதுரு பொதுவான அநுபவம் பற்றிப் பேசின போது, அவர் தேவனுக்குக் கீழ்ப்படியாமை குறித்து மிகுதியான பாரம், மிகுதியான கோரிக்கை, ஒருவரது சுதந்திரத்தின் மீது மிகுதியான கட்டுப்பாடுகளை விதித்து, கிறிஸ்தவ வாழ்க்கையை காட்டிலும் கட்டுப்பாடுகளைக் கொண்டதாகக் குறிப்பிட்டார். தேவனுடைய கட்டளைகளெல்லாம் கிறிஸ்தவர்கள் சுமக்கக் கூடாத அளவுக்கு பாரமானவைகளல்ல. அவைகள் அவர்கள் அடியெடுத்துவைப்பதில் எம்பிக்குதித்தோடச் செய்பவை, அவர்களுடைய ஜீவியத்திற்கு வழிகாட்டுபவை. அதை யோவான் பின்வருமாறு சொல்லுகிறார்: "நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும் போது, தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருகிறோம் என்று அறிந்து கொள்ளுகிறோம். நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக் கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல" (1 யோவான் 5:2, 3).

(2) *தேவனற்ற வாழ்க்கை என்பது இரண்டு முனைகளை இணைக்கும் மின் விசை மாற்றுச் சாதனம் போன்றதல்ல, விருப்பம்போல் அதைப் போட்டு விடுவதும் அணைத்துவிடுவதும் கூடாதது.* ஜனங்கள் சில நேரங்களில் பேசுவதைப் பார்த்தால் அவர்கள் பாவஞ்செய்யும் போதெல்லாம் பழைய தூய்மைக்கு தேவனிடம் மீண்டும் தான் திரும்பக் கூடும் என்பது போல் பேசுவார்கள். அப்படியொன்றும் அது கிரியை செய்வதில்லை. ஒரு நபர் தேவனுக்கு புறமுதுகு காட்டும் போதெல்லாம், அவர் தனக்குத்தானே ஏதோ ஒன்றை செய்து கொள்கிறார். பாவப் பிரவேசம் மேற்கொள்ளும் போது யாரோ ஒருவர் அதன் பாதிப்பில் தீழ்ப்பான தாக்கம் பெற்றவராகிறார். ஒவ்வொருமுறை முரட்டாட்டம் பண்ணும் போதும் பாவி தன்னையே கைவிட்டு குறைவான மிகக் குறைவான சிந்தனைத் திறனையே பிரயோகிக்கிறான். தேவனிடத்திற்கு அவன் திரும்புவது அவனுக்கு கடினமாகிறது. தேவனிடத்திலிருந்து மாறிப் போனவன் தேவனை அறிந்தி ருந்தாலும் உலகிற்கே போய் விடுவதால் முதல் முறை செய்தது போல்

தேவனிடத்தில் திரும்பமுடிவதில்லை.

ஒருவர் பாவத்திற்கென தன்னை ஒப்புக் கொடுக்கும் ஒவ்வொருமுறையும் அது மேலும் கடினமாகிறது. ஒருவன் தேவனை விட்டு உலகத்திற்குத் திரும்பும்போது, அவன் முதலாவதாக விசுவாசித்த போது இருந்த நிலைமையைக் காட்டிலும் கேடுள்ளதாக இருக்கிறான் என்று பேதுரு சொன்னார்.

> கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக் கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும் (2 பேதுரு 2:20, 21).

இது ஒரு பயப்படவைக்கும் கருத்து.

ஒருவன் ஒரு பஞ்சு நூல் பந்தை எடுத்து ஒரு கொக்கியில் மாட்டி வைத்தால், முதல் தடவை சில நூல் புரிவு விட்டுவைக்கப்படும் ஒவ்வொரு முறையும் அப்படிச் செய்யும்போது, இன்னும் கொஞ்சம் சிக்கும், கடைசித் தடவை முழுமையான நூல் புரிவு ஏற்பட்டு பந்து இல்லாமல் போகும். பாவமும் அப்படிதான் செயல்படுகிறது. ஒவ்வொரு முறையும் பாவம் மேலும் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து பயத்தைக் கொடுக்கும், நன்மை செய்ய சிறிய அளவு புத்திக் கூர்மையையே கொடுக்கும். நன்மை இன்னதென்றும் தேவன் யார் என்ற அக்கறையும் நமக்கு இல்லாதபோது அல்லது இனியும் நாம் அவைகளின் அறிவை உணரக்கூடிய திராணி நமக்கு இராதபோது மனந்திரும்பி தேவனிடத்தில் சேருவது கடினமான காரியம். NIV யில் பிரசங்கி 8:8 பின்வருமாறு காணுகிறது: "ஒருவரும் போரின் வேளையில் விடுவிக்கப்படுவதில்லை, அதுபோல் துன்மார்க்கம் அதை நடைமுறைப்படுத்துவோரை விடுவிக்காது."

ஒரு நபர் பாவத்துடன் விளையாடும் போது, ஏதோ ஒரு நாளில் அவன் தேவனிடத்தில் திரும்பக் கூடும் என்ற யூகத்தில், அவன் பாவம் தன்னை பாதிக்கும் வழியை அறியாதவனாயிருக்கிறான், மாம்சத்தை திருப்திபடுத்தும் வகையில் வாழுகிற வாழ்க்கை ஒரு நபரை தேவனிடத்தில் திரும்ப விருப்பமற்றவனாகவே செய்துவிடும். ஒரு வேளை எபிரெயர் புத்தகத்தை எழுதின ஆசிரியர் "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப் பூர்வமாய் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராது" (எபிரெயர் 10:26) என்ற பொருளில் தான் ஒரு வேளை சொல்லியிருக்கக் கூடும்.

(3) *உலகப் பிரகாரமான காம விகார நடக்கைகளும் பொருளாசையும் இம்மையிலும் மறுமையிலும் ஒரு கிரயம் செலுத்தப்பட வேண்டிய வாழ்க்கை.* இங்கே ஒரு அடிமைத்தனம், பாவ அடிமைத்தன ஊழியம் இவ்வாழ்க்கையிலும், வேறெந்த அடிமைத்தன வேலையிலும் இம்மியளவும் பிசகாததாயிருக்கும் வகையில் நித்தியத்திலும் தேவன் தமது ஜனங்களிடம்

கேட்கிறார். சீஷத்துவத்துக்கான அழைப்பு குறித்து திருமறை மிகப் பெரிய அளவில் சொல்ல வேண்டிய போதனைகளைக் கொண்டுள்ளது. நசரேயனாகிய இயேசுவின் நாமத்தைத் தரித்துக் கொள்வது அவ்வளவு மேலோட்டமான விஷயமல்ல. கிறிஸ்தவனாக இருப்பது என்றால் நமது சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று பவுல் சொன்னார் (ரோமர் 12:1).

ஒரு கிறிஸ்தவனுக்கு கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது முக்கியமானது. அவைகளில் தேவையிலிருக்கும் ஒரு அயலானுக்கு உதவுவதும், தேவனுடைய ஜனங்களைக் கொண்ட சமுதாயத்தில் சிறந்த பெற்றோராய் விளங்குவதையும், தேவனுடைய ஜனமாகிய சமுதாயத்தைக் கொண்ட கிறிஸ்துவின் சபையாரை உற்சாகப்படுத்துவதையும் உள்ளடக்கியது. ஒழுக்கரீதியான மதிப்பைக் கைக்கொள்வதையும் உள்ளடக்கியது. பொய் பேசுதல், திருடுதல், ஏமாற்றுதல், இது போன்ற டஜன் கணக்கான உலகத்தாரால் கைக்கொள்ளப்படும் காரியங்கள் யாவும் தவறானவை. கிறிஸ்தவனாக மாறுவது என்பது கிறிஸ்துவின் பாரங்களில் பங்கு பெறுவது. அவபக்தியானவர்கள் போதகரை வெறுத்தால், அவர்கள் சீஷர்களையும் வெறுப்பார்கள். கிறிஸ்துவைப் பின்பற்றுதல் என்பதன் பொருள் நீதிக்காக நின்று நீதியை வெறுக்கிறவர்களை பகைத்துக் கொள்ளுதல். கிறிஸ்தவனாக இருப்பது பாரமானதாக இருக்கிறது.

கிறிஸ்தவனாக இருப்பதற்கு முதல் தேவை செல்லும் செலவை கணக்குப் பார்த்தல் என்று இயேசு கோரினார் என்பதுடன், அவர் வேறு சில காரியங்களையும் சொன்னார். "என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது" என்று இயேசு சொன்னார். ஒழுக்கம் எனும் உண்மையில் நாமெல்லாரும் வாழ்ந்து கொண்டுள்ளோம், நாம் யாவரும் ஏதோ ஒரு வழியை கைக் கொண்டு வாழ வேண்டும். பாவம் கோருகிற பாரத்துடன் ஒப்பிடும்போது, இயேசுவின் பாரம் மெதுவாயும் இலகுவாயுமிருக்கிறது என்று அவர் சொன்னார் (மத்தேயு 11:29, 30).

*முடிவுரை:* பேதுருவின் செய்தி என்னவெனில் இனி வரப்போகும் உலகத்தில் மாத்திரம் பாவத்திற்கான எல்லாத் தண்டனைகளும் வைக்கப்பட்டிருக்க வில்லை. இந்த வாழ்க்கையே போதியளவுக்கு நரகம் மிகுந்ததாக இருப்பதாக என்னிடம் சொன்ன ஜனங்களை பார்த்தும் கேட்டுமிருக்கிறேன். அவர்கள் வாழ்ந்தவிதம் பயங்கரமான விளைவுகளுக்கு அவர்களை நடத்தியிருந்தது, இருந்தும் அவைகள் எல்லாவற்றிற்கும், பாவத்திற்கான தண்டனை அதிகமாயிருக்கும். நியாயத்தீர்ப்பு ஒன்று நடக்கும், அதன் விளைகள் நித்தியத்திற்கும் நிலைக்கும்.

---

**குறிப்புகள்**

[1]Lucian *The Passing of Peregrinus* 11–15. [2]தருமக் காரியங்களை விநியோகிக்கும் போது, தருமக் காரியங்கள் மட்டும் பரிசீலனைக் குரியவைகளல்ல. சில விஷயங்களில் நேர்மறைத் தீங்குகள் சீர்தூக்கிப்பார்க்காமல் பணத்தால் விளையக்கூடியவைகளாயிருக்கலாம். மேலும், கிறிஸ்தவர்கள் ஆஸ்திகளுக்கு உக்கிராணக்காரர்கள் போன்றவர்கள். அவர்கள் அவைகளை ஞானமாய் பயன்படுத்தும் உரிமைக் கட்டளை பெற்றவர்கள். [3]கிரேக்க மொழியில் நேரடிப் பொருளில், "மார்க்க

*விரோதிகளின் அழிவு" என்று சொல்லப்படுகிறது.* [4]*எபிரெயர் வார்த்தையில் சாத்தான் என்றால் "குற்றஞ்சாட்டுபவன்" என்று பொருள், அல்லது "எதிராளி" கிரேக்க மொழியில் டயாபோலஸ் என்ற வார்த்தைக்கு "புறங்கூறித்திரிபவன்," ஏறத்தாழ எபிரெய வார்த்தையின் மொழிபெயர்ப்பு, புதிய ஏற்பாட்டில்,* KJV *யும் இன்னும் மிக சமீபத்திய மொழிபெயர்ப்புகளிலும் "பிசாசு" என்று சொல்லப்பட்டுள்ளது, அது சின்ன எழுத்தில் சொல்லப்பட்டுள்ளது, அதை பொதுப்படையாக எடுத்துக்கொண்டால், "சாத்தான்" என்பதற்கு பெரிய எழுத்தில் குறிப்பிடப்படும், அதினால் அதுதான் பிசாசின் சரியான பெயர்.* [5]Richard J. Bauckham, *Jude, 2 Peter,* Word Biblical Commentary, vol. 50 (Waco, Tex.: Word Books, 1983), 250. [6]*ஜோசிப்பஸ்ஸின் பண்டைய வரலாறு **1.11.4.*** [7]*ஸ்ட்ரேபோ பூகோளம் **16.2.44*** [8]*இப்படிப்பட்ட தர்க்கத்துக்கு தொழில் நுட்பப் பெயர் ஃபோர்டியொரி, இதன் பொருள். "இன்னும் பெரிய காரணத்தால்."* [9]NIV *மற்றும்* NRSV *ஆகியன* NASB, *மொழிபெயர்ப்பை அடிப்படையாகக் கொண்ட வாசகத்தை கொண்டுள்ளது, அவை பேதுருவின் வார்த்தையின் வலிமையை பிடித்துக் கொள்ளவில்லை,* REB *மொழிபெயர்ப்பு இன்னும் சிறப்பாக: "துன்புறுத்தலுக்குத் துன்புறுத்தல்களைபெற்றுக்கொள்ளல்,"வசனப்பகுதியின்ஆதாரத்துக்கானவிவாதம்,காண்க* J. N. D. Kelly *பேதுரு மற்றும் யூதா புத்தங்களின் விளக்கவுரைகள், பிளேக்ஸின் புதிய ஏற்பாட்டு விளக்கவுரை* (London: Adam & Charles Black, 1969), 339. [10]*ஜோசிப்பஸ்ஸின் பண்டைய வரலாறு **1.2.2.***

[11]*ஃபிலோவின் மோசேயின் வாழ்க்கைவரலாறு* [12]*ஜோசிப்பஸ்ஸின் யுத்தங்கள் **6.5.3.*** [13]Those who want to read more may consult Edwin M. Yamauchi, *Pre-Christian Gnosticism: A Survey of the Proposed Evidence* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1973); Simone Pétrement, *A Separate God: The Origins and Teachings of Gnosticism,* trans. Carol Harrison (San Francisco: HarperSanFrancisco, 1984); Kurt Rudolph, *Gnosis: The Nature & History of Gnosticism,* trans. P. W. Coxon and K. H. Kuhn, ed. Robert McLachlan Wilson (San Francisco: Harper & Row, Publishers, 1987). [14]The Nag Hammadi material consists of a cache of Gnostic writings discovered in Egypt in the 1940s. See the discussion in John Painter, *Just James: The Brother of Jesus in History and Tradition* (Minneapolis: Fortress, 1999), 159–81. [15]Quoted by James L. Garlow and Peter Jones, *Cracking Da Vinci's Code* (Colorado Springs: Victor, 2004), 38. [16]Dante *Divine Comedy: Inferno* 3.